பக்கங்கள் பதினாறு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 20 புதன்கிழமை (04-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 205

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரி சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## பொதுஜனஐக்கியமுன்னணிஅரசின் பலம் குறைகிறது

# அவசரகாலச் சட்டம் தோற்றால்

# புலிகள் மீதான தடை எடுபட்டுவிடும்

### எச்சரிக்கை செய்கிறார் ஜனாதிபதி

(நமது நிருபர்)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கு தற்போது ஏற்பட்டுள்ளநெருக்கடி நிலையை அடுத்து அரசியல் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து அதற்கேற்ற வகையில் திடீர்முடிவுகளை மேற்கொள்ள போவதாக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று ஜனாதிபதிசந்திரிகா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மூன்று எம்பிக்களும், லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்க் கட்சி, ஈ.பி.டி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் அரசுசார்புக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

[12ம் பக்கம் பார்க்க]

### பிரதமர் - ரணில் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

அவசரகால நீடிப்பு பிரேரணை தொடர்பாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் அழைப்பின்பேரில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கா நேற்று பிரதமரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது அவசர கால நீடிப்பு பிரேரணை தொடர்பாக இருவரிடையேயும் எந்த விதமான இணக்கமும் காணப்படவில்லை என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க நேற்று நடைபெற்ற ஐக்கிய

(12ம் பக்கம் பார்க்க)

#### அவசரகாலசட்ட நீடிப்பு தோற்றால்

### பாராளுமன்றை ஒத்திவைத்து ஒக்டோபரில் கலைக்க முயற்சி!

[கொழும்பு]

நாளை மறுதினம்வெள்ளிக்கிழமை இடம் பெறும் அவசர கால சட்ட நீடிப்புபிரேரணை தோல்வியடையுமானால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளு மன்றத்தை ஒத்திவைத்து பின்னர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைக் கலைத்து விட்டு பொதுத்தேர்தலைநடத்தலாமென அரசியல்அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவசர காலச்சட்ட நீடிப்பு பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது அதில் அரசு தோல்வியடையுமானல் அரசைக் கலைப்பதைத் தவிர வேறு வழியே அரசுக்கு கிடையாது.

அவசர கால சட்ட நீடிப்பு பிரேரணையை ஐ.தே. கட்சி ஜே.வி. மற்றும தமிழ்க்கட்சிகளின் ரெலோ அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன எதிர்த்து வாக்களிப்பது உறுதியாகி விட்டது இதனால் அரசு தோல்வி அடையுமென அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இப்பாராளுமன்றக் குழுக் கூட்டம் சுமார் ஒன்றரைமணி நேரம் நடைபெற்றது.

(12ம் பக்கம் பார்க்க)

### திருமதி பேரியல் அஷ்ரப் மீண்டும்அமைச்சரவையில்

(கொழும்பு)

கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக ஜனாதிபதியிடம் கையளித்த இராஜினாமாக் கடிதத்தை மீளப்பெற்றுக் கொண்டதுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் மீண்டும் அமைச்சராக இணைந்துள்ளாரென்று பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அஸ்வர், திருமதி பேரியல் அஷ்ரப் அமைச்சரவையில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கின்றாரா எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் திருமதி அஷ்ரப் அமைச்சரவையில் இருந்து இராஜினாமாச் செய்தது உண்மைதான். ஆனால் அவர் இராஜினாமாவை மீளப்பெற்று மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவையில் இணைந்துள்ளார்.

இந்நிலையில் அவர் மீண்டும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டியதில்லையென்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ)

### நம்பிக்கையில்லா பிரேரணை விவாதிக்கும் திகதி இன்று அறிவிக்கப்படும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கியதேசியக்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை, எப்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதென்று முடிவு செய்யும்கூட்டம் இன்று நடைபெறுவதுடன், விவாதம் ஆரம்பமாகும் திகதியும் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

இம்மாதம் 16ம் 17ம் திகதிகளில் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படுமென்று ஊகங்கள் நிலவி வருகின்றது. எனினும் சபாநாயகர் இன்று கட்சித் தலைவர்களின் சட்டத்தில் விவாதம் எடுத்துக் கொள்ளப்படும் திகதியை உத்தியோக பூர்வமாக அறிவிப்பார். (இ)

### 'எம்.பி.மிஷன்'மாலுமி புலிகளால் விடுதலை

(வவுனியா)

எம்.பி. மிஷன் கப்பல் மாலுமி ஜெயந்த ஜெயக்கொடி நேற்று புலிகளினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நாத்தாண்டியா என்ற இடத்தைச் சேர்ந்த மாலுமி ஜெயந்த ஜெயக்கொடி புலிகளால் விடுவிக்கப் பட்டு வன்னியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பேச்சா

(12ம் பக்கம் பார்க்க)

### நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் தற்காலிகமாகக் கடமையாற்றிய தபால் ஊழியர்கள் 7 பேருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பேரில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. [உ]

#### பேரியல்அஷ்ரப்பின்

### இடைகால தடைஉத்தரவு நேற்று நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

தேசிய ஐக்கியமுன்னணியின் தலைவியாக பேரியல் அஷ்ரப் செயற்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

கொழும்புமாவட்ட நீதிபதி சுனில்ராஜபக்ஷநேற்று தடை உத்தரவை நீக்குவதற்கான தீர்ப்பை வழங்கியிருந்தார்.

திருமதி பேரியல்அஷ்ரப் தேசியஐக்கிய முன்னணியின் தலைவியாக செயற்படக்கூடாதென கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடைஉத்தரவைப் பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(12ம் பக்கம் பார்க்க)

### யாழ்குடா மீது விமானத் தாக்குதல் அமெரிக்காவன்மையானகண்டனம்

[கொழும்பு]

பூநகரி, நாகர்கோவில் உட்பட யாழ்குடாநாட்டின் பல்வேறுபகுதிகளில் விமானப் படையினர் கண்மூடித்தனமாக மேற்கொள்ளும் விமானத்தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ்குடாவில்இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதல்கள்குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகம் நேற்று கண்டனமும அதிருப்தியும் தெரிவித்து அறிக்கைஒன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு அதிருப்தி வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

இலங்கையில் நடைபெறுவது உள்நாட்டு பிரச்சினை என எண்ணிஒதுங்கி இருப்பதும் வன்முறைகள் தூண்டப்படுவதையும் அராஜகப்போக்கு தீவிரமடைவதை வெறுமனேகண்மூடி

(12ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீர்வையம்பதி அருள்மிகு செல்லக்கதிர்காம முருகனின்
# இரதோற்சவப் பெருவிழாச் சிறப்புமலர் - 2001

## தல வரலாறு

''அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோறும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்க இருகாலுந் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்''

இலங்கையில் பாடல்பெற்ற திருத்தலங்களுள் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கதிர்காமமும் ஒன்றாகும் இத்தலம் சைவர்களால் மாத்திரமன்றிப் பிறமதத்தவர்களாலும் வழிபாடு செய்யப் பெறும் பெருமையை உடையது கதிர்காமக் கந்தனின் பெருமைகளும் அற்புதச் சிறப்புக்களும் அளப்பரியன

கடந்த சில வருடங்களாகவே கதிர்காம யாத்திரீகர்கள் போக்குவரவுக்கு நவீன வசதிகளைப் பெற்றுள்ளார்கள் அதன்முன் பல நூற்றாண்டுகளாக அடியார்கள் பாதயாத்திரை மூலம்சென்று கதிர்காமக் கந்தனைத் தரிசித்து வந்தார்கள். நூற்றுக்கணக்கான மைல்களை வாரக்கணக்காகப் பாதயாத்திரைமூலம் கடந்துசென்று கதிர்காமக் கந்தனையே நம் மனதில் இருத்திப் பக்தி வைராக்கியம் மிக்கவர்களாய் அடியார்கள். வழிபாடுசெய்து திரும்புவார்கள் அப்படித் திரும்பும்பொழுது அங்கு செல்ல முடியாத பக்தர்களுக்கும் அன்பர்களுக்கும் யாத்திரீகர் முருக பெருமானது அருட்பிரசாதங்களை கொண்டுவந்து கொடுப்பது வழக்கம்.

நீர்வையூரின் மத்தியில் வாழ்ந்திருந்து துறவறம் மேற்கொண்ட இரு தபஸ்வினிகள் அடிக்கடி யாத்திரையில் ஈடுபட்டார்கள். அவர்களுள் ஒருவர் செல்லாச்சி அம்மையார். அவ்விருவரும் கதிர்காமத்திலிருந்து தாம் கொண்டு வந்த வேல் ஒன்றினைத் தாம் வாழ்ந்திருந்த குடிசையின் பக்கத்திலுள்ள கொட்டிலில் பிரதிஷ்டை செய்து பூசித்து வந்தார்கள்;

கதிர்காம உற்சவங்களில் அங்கு செல்ல முடியாதவர்கள் அங்கிருந்து கொண்டு வந்த இந்த வேலைத் தரிசித்து மனநிறைவும் அருளாசியும் பெற்றார்கள். சிறிது சிறிதாக இத்தலம் அன்பர்களையும், ஆதரவாளர்களையும் தன்பால் கவர்ந்தது. காலகதியில் செல்லக்கதிர்காமம் எனப் போற்றப்பட்டுச் சிறப்பாக பூசிக்கப் பெற்றுவந்தது.

தபஸ்வினிகள் இருவரும் இத்தலத்தினை சிறப்புற அமைக்க விரும்பினர்; ஊர் தோறும் பாதயாத்திரை மூலம்சென்று நிதிபெற்றனர் இவ்வாறு கிடைத்த காணிக்கைகளையும் தமது பொருளையும் சேர்த்து 1936 ஆம் ஆண்டு ஆகமவிதிப்படியான ஒரு ஆலயத்தைப் புதிதாகவும் சிறப்பாகவும் அமைத்தார்கள். சிற்பசாஸ்திர விதிகளுக்கமைய அமைக்கப் பெற்ற இவ்வாலயத்தில் அமைந்த சிற்பவேலைப்பாடுகள் அன்றைய சிற்பவேலைத்திறமைகளை விளக்குவனவாக அமைந்துள்ளன அவை இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளைக் கல்லான இக்கட்டிடத்தில் அமைந்துள்ள திருவாசியுடன் கூடிய பிள்ளையார் சிலை பார்ப்போர் யாவரையும் பரவசப்படுத்துகிறது.

நீர்வேலியிற் சிறந்த அந்தணர் குலப்பெருமகனாக வாழ்ந்திருந்த சிவ ஸ்ரீ தியாகராசக் குருக்கள் அக் காலத்திலிருந்து செல்லக் கதிர்காம சுவாமி கோயிற் பூசகராகத் தொண்டு செய்ய அருள் கிட்டியது சிறிதுகாலத்தில் செல்லாச்சியம்மையார் சமாதி நிலையடைந்து விட்டார். குருக்கள் அவர்களதுபக்தியும், கதிர்காமப் பக்தர்களின் ஆர்வமும் ஆலயம் மிகச் சிறப்பாக விளங்க உதவியது

குருக்களவர்கள் முதுமையாற் தளர்வடைந்த பின்னர் அவர் மகனும், பின்பு நீர்வேலி நீலகண்டக்குருக்களும் பூசகர்களாயிருந்து தொண்டு செய்து வந்தார்கள்.

கோயிற் பராமரிப்பாளர்களாகச் செல்லாச்சி அம்மையாரால் நியமிக்கப்பட்ட திருமதி இராசாவும் பிள்ளைகளும் தனித்துப் பராமரிக்க முடியாதுபோகவே அன்பர்கள் பலர் சேர்ந்து மாதா மாதம் பூசைக்கான ஒழுங்குகளைச் செய்து வந்தார்கள்.


தற்பொழுது பிரம்ம ஸ்ரீ தியாகராசா சர்மா அவர்கள் பூசகராகத் தொண்டு செய்யத் திருவருள் பாலித்தது. சர்மா அவர்கள் கோயிற்பூசைகளை மேலும் சிறப்புற நடத்த ஆரம்பித்தார்கள் கதிர்காம பக்தர்களான பல அன்பர்கள் அவருக்கு ஆதரவளித்தார்கள். குறிப்பாக அமரர் க. அப்பாத்துரை, அமரர் திரு த.சின்னத்துரை, திரு. த. தர்மலிங்கம், திரு இ கந்தசாமி, திருமதி இராசா, திருமதி துரைசிங்கம் அவர்களும் மற்றும் பல அன்பர்களும் இக் கோவிலைப் புதுப் பொலிவுடன் காண விரும்பினர்.

நாட்டின் குழப்பநிலைகாரணமாகக் கதிர்காம யாத்திரை செல்ல முடியாததால் இக்கோயிலை விரைவில்புதுப்பிக்க வேண்டுமென்ற ஆர்வம் மக்களிடம் உண்டாயிற்று. கோயிலை புனரமைத்துக் கும்பாபிஷேகம், திருவிழாக்கள் நடத்துவதுடன் கதிர்காமஉற்சவ காலங்களிலும் சிறப்பு விழாக்கள் நடத்தி வழிபட வேண்டுமென்ற எண்ணமும் பக்தர் மனதில் உதித்தது திருவருளின் வழிகாட்டுதலோடு மேற் குறிப்பிட்ட அன்பர்களின் தீவிர முயற்சிகளால் நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காமசுவாமி கோயில் சிறப்பாகப் புனரமைக்கப் பெற்று வீதியில் புதிதாகவிநாயகர் ஆலயமும் அமைத்துக் கும்பாபிஷேகம் நடை பெற்றது

1991 இல்நவக்கிரக ஆலயம் கட்டிக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது 1997 இல் வைகாசி புனர் பூசத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது

மக்கள் இடப்பெயர்வினால் சேதமடைந்த பின் கதிர்காம முருகன்ஆலயம் புதுப்பொலிவு பெற வேண்டும் என ஆவல் கொண்டு ஆலயத்தைப் புதுப்பித்து சுற்றுப்பிரகாரக்கொட்டகைகள், வசந்த மண்டபம், யாகமண்டபம், மணிக் கோபுரம், உள்வீதி யாவும்அழகுறத் திருப்பணிகள் செய்ய முன்னின்று தொண்டாற்றிய அமரர் திரு த.சின்னத்துரை, அமரர் திரு க.பரமநாதன், அவர்களையும் திரு அ.சுப்பிரமணியம், திரு க. தங்கேஸ்வரன், திரு வே. செல்லத்துரை, திருமதி சி.நாகேஸ்வரி அவர்களையும் மஹோற்சவ விழாக் காணும் இவ்வேளையில் பெருமையுடன் பாராட்ட

(12 ம் பக்கம் பார்க்க)



## இரதோற்சவமாண்பு

ஆன்மாஈடேற்றத்திற்கு வழிகாட்டும் ஆலய விழாக்களில் இரதோற்சவம் தனிச்சிறப்புடையதாகும் ஊர்கள் தோறும் நடைபெறும் விழாக்களிற் தேர்த்திருவிழா மக்கள் மனதிலே சிறந்த பக்தியுணர்வையும்புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துவதைக் காணலாம், இவ்விதத்திலே நீர்வையூரில் முதன்முதலாக சிவாகம முறைப்படிமஹோற்சவ விழாக்காணும் கலியுகவரதனாகிய கதிர்காமப் பெருமானுடைய இரதோற்சவ விழாவும் இன்று, இவ்வூரில் மக்கள் மனதிலே பேரார்வத்தையும் பக்தியுணர்வையும் ஏற்படுத்தியிருப்பது கண்டு எல்லாம் வல்ல கந்தவேள்பெருமான் எல்லோருக்கும் இன்னல்களைந்து இன்புற்று வாழ நல்லருள் பாலிக்க வேண்டி அவர்பாதங்களைப் பணிந்து ஏத்துகின்றோம்.

ஸர்வே ஜனாகா சுகினோ பவந்து!
சிவஸ்ரீ-கு தியாகராசக் குருக்கள்
(ஆலய,துவஜாரோகண குரு)

## காலத்திற்கு ஏற்றதாய் அமைந்த 'மஹோற்சவச் சிறப்பு' என்னும்நூல்

நீர்வை அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி கோவிலில் மங்களகரமாக முதன் முதலில் நிகழும் மஹோற்சவ வைபவத்திலே மணிமகுடம் வைத்தாற் போலச் சிறப்புடன் அன்றைய கொடியேற்ற நன்னாளில் வெளிவந்துள்ளது 'மஹோற்சவச் சிறப்பு' என்னும் அருமையான நூல்;

மிகவும் அருமையான இந்நூலை மேற்படி தேவஸ்தானப் பிரதமகுருவும், பல தமிழ், சமஸ்கிருதப் புஸ்தகங்களை வெளியீடு செய்தவரும், சிறந்த அறிவாளரும் ஆகிய சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள் (மணிஐயா) அழகான அட்டைப்படத்துடன் வெளியீடு செய்துள்ளார்.

நூலுக்கு ஆசியுரையைச் சுன்னாகம், மயிலணி சிவஸ்ரீ.ச. சோமாஸ்கந்தக் குருக்கள் ஐயா வழங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமஸ்கிருதப் பேராசிரியர் வி. சிவசாமி அழகாக அறிமுகவுரையை வழங்க. இந்துநாகரிகத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் ப. கணேசலிங்கம் சிறப்புரை வழங்கியிருப்பது இந்நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

உள்ளே, மஹோற்சவச் சிறப்பு, கொடிமர அமைப்பு, கொடிச் சீலையின் தத்துவம், உற்சவகாலங்கள், ஆங்காங்கே கிரியைகளுடன் சித்தாந்தக் கருத்துக்கள், ஏனைய உற்சவ சம்பந்தமான பூரணவிளக்கங்கள், ஆகியனவும் சிறப்பாகத் திருவிழாக்களின் உட்பொருள் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றுடன். நவசந்திப் பாக்களையும் இணைத்துள்ளமை இந்நூலை மேலும் சிறப்பானதாக்கியுள்ளது. சைவ சமயத்தவர் அனைவரின் கைகளிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல்களில் இந்நூலும் ஒன்றாகும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

பிரம்ம ஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்கள்
வேதாகம கிரியா சிரோண்மணி
மயிலணி

மலரமைப்பு;
**நீர்வையூர் சுதர்சினி**

### வளங்கொழிக்கும் வரருமள்வான்

அருளொளி வீசும் ஆறுமுகவேலனவன்
அன்பர்க் கருள்புரிய ஆலயங் கொண்டே
நீர்வையம் பதிதனிலே நிகரிலாவளங்கொழிக்க
நினைந்திடு மடியாரில் நிலையாக நின்றிடுவான்
-அன்பர் குழாம்-

தேரேறும் முருகனருள் காண வேண்டி நிற்கிறோம்
மீண்டும் நீர்வேலியில்
அம்பாள் ஹாட்வெயர்ஸ்
காமாட்சியம்பாள் கோவில் முன்றல், நீர்வேலி.
உரிமையாளர் : த. பரராஜசிங்கம்

நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ
திருமுருகனை வேண்டுகிறோம்!
வினோ நகைப்பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. FAX: 2824

## எம்மைக் காத்திருவாய்

ஓடி,யோடி யலைகின்றோம் முருகா!
நாடி வந்த எம்வினையை அறுப்பாய்,
வாடிவதங்கும் எம் துயரம் போக்க
காடுமேடு கடந்துவந்த முருகா!
தேரில் உன்னைத் தொழுது நிற்கின்றோமே
இன்பம் தந்தெம்மைக் காத்திடுவாயே.

ஶரா

உ

## மகிமைமிக்கத் தேர்த்திருவிழா

ஊர் எல்லாம் ஒன்று திரண்டு கோயிலில் கூடி, இறை வழிபாடு செய்து, இறைவனைத் தேரிலே ஏற்றி வீதிவலம் வர வடந்தொட்டு தேரிழுக்கும் நிகழ்வு எவ்வளவு ஆனந்த மான நிகழ்வு.

தேரிலே எழுந்தருளிவரும் இறைவனைத் தரிசிப்பது பிறவித்துன்பங்களை நீக்கும் என்பது வேதங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது.

மஹோற்சவ காலங்களிலே தேர்த்திருவிழா மிகமுக் கியமான திருவிழாவாக அமைகின்றது.

பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான அழித்தல் தொழிலையே தேர்த்திருவிழா குறிப்பதாகும் இறைவன் ஆன்மாக் களிடமிருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களையும் நீக்கி முத்தியின்பம் ஆகிய பரமானந்த நிலையை யடையச் செய்தலையே இந்த தேர்த் திருவிழாத் தத்துவம் உணர்த்துகின்றது.

இப்படியான மகிமைமிக்க உற்சவம் இன்று நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோயிலில் நடைபெறுவது இக் கிராமத்துக்கே பேரானந்தமான சிறப்பான நிகழ்வாகும்.

மேலும், 1936 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்திலே இவ்வாண்டு முதன் முதலாக கொடித் தம்பம் நிறுவப்பெற்று ஆகம விதிப்படி கொடியேற்றம் நடைபெற்று, உற்சவங்கள் எல்லாம் ஒழுங்குமுறைப்படி நடைபெற்று இன்று தேர்த்திருவிழா நடைபெறுவது மிக மிக சிறப்பான நிகழ்வாகும். தேரேறி வீதிவலம் வரும் வேலவனின் பேரருளை வேண்டித் துதிப்போமாக.

சமூக சோதி
த. பரராஜசிங்கம்
நீர்வேலி. சமாதானநீதவான்.

# நீர்வையில் தேரேறிவந்து அருளும் செல்லக்கதிர்காம முருகன்

ப. கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

கண்கொள்ளாக் காட்சியினை நாம் தினமும் கண்டின்புற்றுக் கொண்டிருக்கின்றோம்.

கோயில்கள் நிறைந்த பதியாக நீர்வேலிக் கிராமம் விளங்குகின்றது. இக்கிராமத்து மக்கள்வழிபாடுஇயற்றுகின்ற தெய்வங்களாக விநாயகர், முருகன், அம்மன், வைரவர் ஆகியன விளங்குகின்றன. இத் தெய்வங்களுள் முருகப் பெருமானுக்குரிய ஆலயங்களுள் ஒன்றாக அருள் மிகு செல்லக்கதிர்காம ஆலயம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் கதிர்காமக் கந்தன் ஆலயம் போலவேல் பிரதிஷ்டை செய்யப் பெற்று, சிறியளவில் அமைக்கப்பெற்ற இச் செல்லக்கதிர்காமதேவஸ்தானம, இவ்வாண்டு முதன் முதலாக புதிய கொடிஸ்தம்பம் வைத்து 24-06-2001 அன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இன்று தேர்த்திருவிழா உற்சவம் மிகவும் சிறப்பாக நிகழ்கின்றது.

கோயில்களில்வருடம் ஒரு முறை நிகழுகின்ற உற்சவத்தினை நைமித்திய உற்சவம் என அழைப்பர் இவ்வுற்சவத்தில் மஹோற்சவம் முதன்மையானது. இவ்வுற்சவமானது பஞ்சகிருத்தியத்தத்துவமான ஐந்தொழில்களைக் குறிப்பதாகும் ஐந்தொழில்களுள் ஒன்றான அழித்தலைச் சுட்டி நிற்பது தேர்த்திருவிழா நிகழ்வாகும்.

இந்துக் கோயில்கள் வழிபாட்டிடங்களாக மட்டுமல்லாது சமூக நிறுவனங்களாகவும் விளங்குகின்றன ஊரீ கூடித்தேர் இழுத்தல் என்பதற்கு இணங்க இவ்வூர் மக்கள் அணிதிரண்டு முருகப் பெருமானைத் தேரிலேஎழுந்தருளச் செய்து இழுப்பதற்கு ஒன்று கூடுகின்றார்கள்.

தேரின் அமைப்பானது பல்வேறு தத்துவங்களை உணர்த்தி நிற்கின்றது. இறைவனுக்கு அளிக்கப்படுகின்ற உபசாரணங்களுள் இராஜோபசாரத்தினை இத்தேர் ஊர்தி உணர்த்திநிற்கின்றது.மேலும் சுவாலித்து எரியும் அக்கினின் தோற்றத்தில் அமைக் ...

(8ம் பக்கம் பார்க்க)

'பஞ்சம் படைவந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோநாங்களடிகிளியே ஆறுமுகன் தஞ்சமெடி'

எனப் பாடினார் யாழ்ப்பாணத்துயோகசுவாமிகள்இன்று யாழ்ப்பாணப் பிரதேசம் எங்கும் கோயில்களில் மஹோற்சவங்கள் மிகவும் சிறப்புற நிகழ்ந்து கொண்டிருக்கின்ற

தலவரலாறு,..·

வேண்டியுள்ளது.

இவ்வாறாக எம்பெருமானின் பெருங்கருணையாலும் அடியவர்களின் பக்தித் திறத்தாலும் இவ் வாலயமானது சிவாகமவிதிப்படி அமைந்து, புதுப்பொலிவு பெற்று திகழ்வதோடு இன்றைய தினம வள்ளி-தெய்வயானைசமேதராக அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் வகையில் எம் பெருமான் இரதோற்சவத்தில் பவனிவரும்காட்சியைக்காண நீர்வையம் பதி மக்கள் குழாம் புடை சூழ அணிசெய்துவலம் வருவதை கண்டு களிக்க முடிகிறது'அத்துடன்இவ்விஷேவருடத்தில் புதிதாக நாட்டப் பெற்ற கொடித்தம்பத்தில் கொடியேற்று வைபவம் கோலாகலமாக இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

சுபம்

# சேவை நலன் பாராட்டு விழா

02. 02. 2001 அன்று இளைப்பாறிய அதிபர்

**திரு. விநாயகமூர்த்தி ஏரம்பமூர்த்தி**

(விசேட பயிற்சி விவசாயம்) (இ. அ. சே. தரம்.2,1)

அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா

ஆரம்பக் கல்வி சுப்பிளான் விக்னேஸ்வரா
உயர் கல்வி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

| சேவையாற்றியஇடமும் | காலமும் |
|---|---|
| ஆசிரியர் பதுளை சரஸ்வதி ம.வி. | 01.11. 1971 - 14. 2. 1973 |
| ஆசிரியர் ஆலிஎல போஹொட சிங்-தமிழ் வித்தி | 15. 2. 1973 - 28 . 2.1973 |
| ஆசிரியர் பதுளை சரஸ்வதி ம.வி. | 1. 3. 1973 - 21. 4. 1974 |
| ஆசிரியர் யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | 22. 4. 1974 - 31. 12. 1975 |
| ஆசிரியர் நீர் கொழும்பு விஜரத்தினம் ம.வி | 01. 01. 1976 - 09. 02. 1976 |
| ஆசிரியர் மினு/ சொச்சிக்கடை கம்மல்துறை முஸ்லிம் வித்தியாலயம் | 10. 02. 1976 — 19. 04. 1977 |
| ஆசிரியர் வவு/ முள்ளிவாய்க்கால் மேற்கு அ.தக.க பாடசாலை | 20. 4. 1974 — 14. 6. 1977 |
| ஆசிரியர் யா உரும்பிராய் இந்துக்கல்லூரி | 15. 6. 77 - 30. 04. 78 |
| உபஅதிபர் யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை | 01. 05. 1978 — 6. 11. 1991 |
| அதிபர் யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் | 07. 11. 1991 — 02. 02. 2001 |

மேற்படி பாடசாலைகளில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் அதிபராகவும் கடமையாற்றி 01-06-1992 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-1க்கு பதவியுயர்வு பெற்று 02. 02. 2001 ல் ஓய்வுபெற்றுச் சென்ற அதிபர் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்தி அவர் பல்லாண்டுகாலம் நலமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா- சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்,
சுன்னாகம்.

**அனுரா வீடியோ விஷன்**
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

**ரோபிசன் எலக்ரோணிக்ஸ்**
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்

**ரஞ்சனாஸ் புடவையகம்**
4, மத்திய சந்தை
சுன்னாகம்

**சுபேந்திரன் நகைத் தொழிலகம்**
18, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்

**சசிக்குமார் நகையகம்**
35 கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்

**தபோதரன் கண்ணாடி அலுமினியம்**
போட்டோ பிறேம்
57 கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்

**ரிப்ரொப் உணவகம்**
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்

(C2176)

## பருத்தாயம்

(கோப்பாய்)

சட்ட விரோதமாக மின்னிணைப்புப் பெற முயன்றவரைத் தடுத்து நிறுத்த முனைந்த குடும்பஸ்தர் தாக்கப்பட்ட சம்பவம் அண்மையில் கோப்பாய்ப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் தலையில் கடும் காயங்களுடன்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். [உ-79]

## நீர்வையில்...

கப்பட்ட தேரானது அழித்தலைக் குறிப்பதாகும்தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. தேரில் இறைவன் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. வாழ்க்கைத்தேர் சிறப்பாக ஓடுவதற்கு நமது இருதய பீடத்திலே இறைவனைஎப்போதும் எழுந்தருள வைத்திருக்க வேண்டும் தேர் சரியான பாதையில் ஓடுவதற்கு இசைவாக சறுக்குக் சட்டைகள் போட்டு அதனைக் கட்டுப்படுத்துவது போல, நமது வாழ்க்கையும் நல்வழியில் நெறிப்படுத்த வேண்டும் என விளக்கம் அளிக்கப்படுகிறது.

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காமம் ஆலயத்திலே கோயில் கொண்டிருக்கின்ற முருகப் பெருமான் இன்று தேரிலே ஆறுமுகப் பெருமானாக ஆரோகணித்து அருள் பாலிக்கின்றான். முருகப் பெருமானின் இவ்வழகிய திருக்கோலத்தை கச்சியப்பச் சிவாச்சாரியார், கந்தபுராணத்திலே,

'மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழிகருணைபோற்றி ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள போற்றி காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான் சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி'

என வருணிப்பதுஇங்கு ஒப்பு நோக்கற்பாலது.

தேர் அமைப்பு முறைகளை விபரித்துக் கூறும் ஆகம, சிற்ப சாஸ்திரங்கள் தேர்த்திருவிழா நடை முறைபற்றியும் விபரித்துக் கூறியுள்ளனர். தேர்த்திருவிழாவினை பிரமோற்சவம் என அழைப்பர் தேர்த்திருவிழா, ஆலய விழாக்களுள் சிறப்புடையதாகும். இது பற்றி தவத்திரு குன்றக்குடி அடிகளார்,

தேர்த்திருவிழாவைப்போல மகிழ்வைத்தரத்தக்க விழா வேறொன்றில்லை. சமய நெறி தழுவிய சமுதாய அமைப்பிற்குத் தேர்த்திருவிழாவே அரண்செய்கிறது; என்று குறிப்பிட்டுள்ளார். சமுதாய அமைப்பினையே நெறிப்படுத்தும் தேர்த்திருவிழா, இந்து சமயத்தைப் பொறுத்த வரையில் ஓர் 'பதி புண்ணிய விழா' வாக அமைவதுடன் 'இறைவனுக்குரிய ராஜோசாரம்' என்று போற்றப்படுவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

# 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

## அன்னைக்கோர் விண்ணப்பம்

அன்னம் அளித்திட்டு அமுதூறு சுரபிதனில்
இன்னம் பாலிக்கும் எழிலநாக ஈஸ்வரியே!
இன்னுமோர் விண்ணப்பம் இணையடிக்கீழ்
வைத்தோம் நாம்
நன்னீர் சுரந்திட்டு நயினையிலே வருவோர்க்கு
உண்ணீர் உண்ணீரென உவந்தளிக்க வரமருள்வாய்!
விண்ணீர் மண்ணீராய் வீழ்ந்துகுளம்
குட்டையெலாம்
தண்ணீர்த் தூய்மையுடன் தாகமெலாம்
போக்கிடுவாய்!
கண்ணீர் சொரிந்துனது கால்கழுவி வேண்டுகிறோம்!
வான் நின் (று) இழிந்துவரும் வற்றாடன்
அருட்சுரப்புத்
தானே அமிழ்தமெனத் தந்திடுவாய் பூஷணியே!

நயினைக் கவிஞர்
நாக சண்முகநாதபிள்ளை

## தேரேறும் நாகம்மாள்

ஆழி நீர் சாமரை வீசிட
அழகுத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்
வாழும் தமிழினம் பூமழை பொழிந்திட
வண்ணத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்
சூழ்கலி பூமியில் ஓடி மறைந்திட
சுதந்திரத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்
ஏழ்மையும் பிணியும் எங்கும் தொலைந்திட
நயினையில் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்
ஏழ் கடல் வடம் பிடித்து இழுத்திட
எழிலுடன் அம்பாள் தேரில் ஏறுகின்றாள்
மாணிக்கப் பரலுக்குள் மல்லிகை குவிந்திட
மங்கை நாகம்மாள் தேரில் ஏறுகின்றாள்
நீரினில் மிதக்கும் தமிழர் கூட்டம்
நிம்மதி வழங்கிட தேரில் ஏறுகின்றாள்

நல்லை அமிழ்தன்

## வீதிவலம் வந்தருள்வாய்!

அத்திமுகன் ஆறுமுகன் தேர்களோடு
அம்பிகையே அருட்தேரில் வருவாயம்மா
எத்திசையும் இன்னலுறும் மக்களுக்கு
இன்னருளைத் தந்துவரம் தருவாயம்மா
பக்தரெல்லாம் பணிந்தேத்தி உந்தன் பாதம்
பரமென்று உனையடைந்தார் பாருமம்மா
சித்தரெல்லாம் வியந்தேத்தும் நாகத்தாயே
திருத்தேரில் வீதிவலம் வந்தருள்வாய்
மலையெனத் துன்பம் நாளும்
மனதிலே சுமந்து நின்றோம்
அலைகடல் தாண்டி யுந்தன்
அருட்கடல் வேண்டி வந்தோம்
தலைவியே நாகத் தாயே
தமிழரெம் வாழ்வு உய்ய
கலைபொலி தேரில் வந்து
காட்சிதந் தருள்வாயம்மா!

நயினை இரத்தினசிங்கம்
க. கு. அங். இல 109

## தமிழர் நிலைசிறக்க வருக!

நாகம்மா தாயே நீ தேரேறி வருக!
நாம்கொண்ட துயரகன்று நல்லின்பம் பெருக
நாகமது குடைபிடிக்க வீற்றிருக்கும் நம்தாயே!
நற்றமிழர்க் கருள் சொரியத் தேரில்வலம் வருக
வேகமுடன் ஓடிவந்தோம் வீரமிரு தாயே!
வண்டமிழர் வாழ் வளிக்க தேரினிலே வருக
தாகமுடன் தேடிவந்தோம் உன்னருளை நாடி
தமிழரெம் நிலைசிறக்கத் தேரினிலே வருக

நீர்வையூர் பராபர
க.கு அங. இல- 02

## தரிசிப்பாரை வாழவை!

பொங்கரவு பொலிய வருமெங்கள் நாகம்மே
ஆலைக் கரும்பாய் ஆழித்துரும்பாய்
கங்குல் பகலாய் கலங்கி மாழுதல் தகுமோ
இது தர்மமோ தாய் நீயிருக்க
பங்கப் பட்டு பாடுகள் சுமப்பதும் விதியோ
வண்ணத் தேரேறி வரும் தெய்வமே
மங்கலம் தருவாயம்மா மானிலமெங்கும்
மறைகளோங்கி மானுடம் வாழ்வதற்கே!

சீரான வாழ்வும் சிவபூமிச் சிறப்பும் மண்ணின்
மேலான பண்பும் பாழாவது நன்றோ
நீராடும் கண்களால் நிலம் நனைவம் முறையோ
மகவிழந்து மணாளனிழந்து
போராடும் நெஞ்சங்கள் பெருகுவதும் சரியோ
நோகும் மனமாற உன்னடி வந்தோம்
ஆரணியே ஆரூரானின் உடல் பாதியானவளே
தேரிலே வந்து தரிசிப்பாரை வாழவை!

கந்ததியாகராசா
கோண்டாவில்.

## தேவிக் கோர் விண்ணப்பம்

நாகதீவு தேவி உன்னை சரண் புகுந்தோம்
நாட்டில் நல்ல தீர்வு வந்து சேரவேண்டும்
வேகமாகும் போர் நிலைமை மாறவேண்டும்
வெற்றி தரும் பேச்சையிங்கு தொடங்க
வேண்டும்
நேசமான வன்னி மக்கள் வாழ வேண்டும்
நிரந்தரமான தாய் மண்ணைச் சேரவேண்டும்
ஆசையோடு கேட்பதெல்லாம் கிடைக்க வேண்டும்
அன்னையுந்தன் பெயரையெண்ணி வாழ
வேண்டும்

மதுரகவி. காரை,
எம். பி. அருளானந்தம்

## சஞ்சலம் மறையுது பூமியில்

மந்திர ஒலியது நயினையில்
மணற்காற்று அலையுடன் பரவுது
சந்தனம் மணக்குது வீதியில்
சஞ்சலம் மறையுது பூமியில்
சுந்தர மேனியைத் தொழுவதால்
துயரெலாம் எமைவிட்டோடுதே
சந்தரம் பெருகுது வாழ்வினில்
சக்தியின் திருவடி தொழுகையால்

பாமப்பிரியன்

## நயினை நாகம்மை

நன்னயஞ் சேர் நயினை நகர்தன்னில்
நந்துதவழ் கழனி செறி கோயில் தன்னில்
நம்புமடியவர்க் கருளியுறையும்- நாயகியே
நலனோங்கும் நயினை நகர்- நாரணியே

லோ. உமாமகேஸ்வரி
நயினாதீவு

## காலனைக் கலைத்தவள்

அன்பினால் விளைந்தெம்மை ஆட்கொண்டு
அறிவினால் விளைந்தெம்மை பூத்தந்து
கண்ணினால் காத்தெம்மை களிப்பூட்டி
காலனைக் கலைத்தவள் அழைக்கின்றாள்

புலேந்தி திலீப்காந்த்
க.கு.அ.இ-18
மொறட்டுவ பல்கலைக் கழகம்


நயினை நாகபூஷணியின் திருத்தேர் உலா
அனைவருக்கும் நன்மை அளிப்பதாக அமையட்டும்

க. வாகீசன்
பலசரக்கு வியாபாரம்

6 ம் வட்டாரம் நயினாதீவு
உரிமையாளர்; வி. கே. கணநாதன் [இ-1846]



இன்று தேரேறும் நயினை அம்மனின் அருள்
அனைவருக்கும் பாலிக்க வேண்டுகின்றோம்!

★ குளியலறை உபகரணங்களா?

★ மட்பாண்ட அன்பளிப்புப் பொருட்களா?

அனைத்திற்கும்

நியூ விமாகி

27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/ 1846)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன்

# இரதோற்சவ சிறப்புமலர் - 2001

இன்று ரதபவனி வரும் நயினை நாகபூஷணியின்
அருள் வேண்டி நிற்கின்றோம்!

**லக்ஷனன் பத்திரிகை விற்பனையகம்**

1, ம் வட்டாரம், நயினாதீவு.
(1851)

நயினை நாயகியின் அருள்
அனைவருக்கும் பாலிக்க
வேண்டுகின்றோம்.

**அம்பாள் வீடியோ ஓடியோ போட்டோ சென்ரர்**

5ஆம் வட்டாரம், நயினாதீவு.
உரிமையாளர்: **க. கஜன்**
(C/ 1845)

நயினை நாகபூஷணியின் தேர் சிறப்புற
வாழ்த்துகிறோம்.

**அபிராமி வீடியோ சென்ரர்**

**அபிராமி சைவ உணவகம்**

7ம், வட்டாரம், நயினாதீவு.
[C/1841]

**இன்று தேரேறும் நயினை ஸ்ரீநாகபூஷணியின் அருள் வேண்டி நிற்கின்றோம்!**

**தாரணி படகு சேவை**

1 ஆம் வட்டாரம், நயினாதீவு.
உரிமையாளர்: **க. சவுந்தரநாயகம்**
(C/ 1846)

நயினை அம்மனின் ரத உலா அனைவர்க்கும்
நன்மை அளிப்பதாக அமையட்டும்!
காலத்தால் அழியாத, கற்பனைக்கு எட்டாத
தங்க நகைகளுக்கு

**சிவ மகாலட்சுமி நகை அகம்**

★ தங்கப் பவுண் நகை வியாபாரம் ★

176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக)
(C/ 1838)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் நயினை நாகபூஷணியின் அருள்
கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.
மங்கையர் மனம் மயங்கும் மங்காத அசல்
22 கரட் தங்க நகைகளுக்கு

**ஜெய கிருஷ்ணா ஜுவல்லர்ஸ்**

★ தங்கப் பவுண் நகை வியாபாரம் ★

158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/ 1840)

## இன்று தேர்

(புலோலி)

தென் புலோலி புற்றளை சித்திவிநாயகராலய தேர்த் திருவிழா இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 6 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன,

(செ-52)

* * *

(புலோலி)

சரவெட்டிதச்சன் தோப்பு விநயகராலய வருடாந்த மகோற்சவம்கடந்த 26ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(செ-52)

* * *

(யாழ்ப்பாணம்)

நந்தாவில் கற்புலந்து மனோன் மணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று புதன் கிழமையும், தீர்த்தத் திருவிழா நாளை வியாழக் கிழமையும் நடைபெறவுள்ளன.

(செ)

## அலங்கார உற்சவம்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளன.

[செ-59]

**நயினை அம்பிகையின் ரதபவனி அனைவருக்கும் நன்மை அளிப்பதாக அமையட்டும்**

**மாணிக்கவாசகர் ரேட் சென்ரர்**

★ **பல்பொருள் வாணிபம்** ☆

6 ம் வட்டாரம் நயினாதீவு
[C- 1847]

**இன்று தேரேறும நயினை ஸ்ரீ நாகபூஷணியின அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்**

★ தாலிக்கொடி ★ மோதிரம்

ஆகியவற்றை தத்துருவமாக வடிவமைப்பதில் யாழ் நகரில்
சிறந்து விளங்குபவர்கள்

**ஒலிம்பிக் நகைத் தொழிலகம்**

190,4 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
உரிமையாளர்: ச. சந்திரசேகரம் [சின்னமணி] [1840]

# நயினாதீவு நாகபூஷணி அம்மன்

# இரதோற்சவ சிறப்பு மலர் - 2001

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின்
தேர் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## அம்பிகை பல்பொருள் வாணிபம்

**1ம் வட்டாரம் நயினாதீவு**
உரிமையாளர்; ந. ஜெகநாதன்
(C/ 1840)

நயினை நாகபூஷணியின் திருத்தேர்
திருவிழாவை சிறப்புற வாழ்த்து
கின்றோம்.

## சோபி கொமினிக்கேசன்

5ஆம் வட்டாரம், நயினாதீவு.

தொலைபேசி இல. 070- 212721,
070- 212866.

உரிமையாளர்: யோகு- மணி
(C/ 1850)

நயினை அம்மனின் அருள்
அனைவருக்கும் கிடைத்திடபிரார்த்திக்கின்றோம்

## விக்கினேஸ்வரா படகு சேவை
## சுகபாணி படகு சேவை
## சந்திரா படகு சேவை

6ம்வட்டாரம் நயினாதீவு
உரிமையாளர்: எஸ். குகதாசன்
(C-1834)

இன்று தேரேறும் நயினை அம்பிகையின் அருள்
வேண்டி நிற்கின்றோம்!

## நாகராணி
## படகுச் சேவை

**6ஆம் வட்டாரம், நயினாதீவு.**

உரிமையாளர் ச. தருமராசா
(C/ 1849)

நயினாதீவு நாகபூணி அம்மன் தேர் ஏறி வீதி உலா வந்து
நாடு எங்கும் சமாதானம் வேண்டி பிரார்த்திக்கிறோம்.

## விக்னேஸ்வரா ஸ்ரோர்

**(பல்பொருள் வாணிபமும் கட்டடப் பொருள்
விற்பனையும்)**

## விக்கினேஸ்வரா

**அரைக்கும் ஆலை**

6ம் வட்டாரம், வங்களாவடி நயினாதீவு
உரிமையாளர், நா. காராளபிள்ளை
(C-1841)

இன்று ரதபவனி வரும்
நயினை நாகபூஷணியின்
அருள் வேண்டி நிற்கின்றோம்!

**முகூர்த்தப்
பட்டுப் புடவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்**

## சௌமியா ரெக்ஸ்

**இல: 4, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.**
(C/1847)

இன்று ரத உலா வருர்மணிபல்லவத்தின் நாயகியை வணங்கி நிற்கின்றோம்!
மின்சார உபகரணங்களுக்கு யாழ்நகரில் சிறந்து விளங்குபவர்கள்

# நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ்

**141, 143, ஸ்ரான்லி வீதி, T.P-2037 யாழ்ப்பாணம்.**
(கி-1848)

## இன்று ஒரு தகவல்

# துன்பத்தின் முடிவு இன்பம்

அரசன் ஒருவன் அரியணையில் வீற்றிருந்தான். அப்பொழுது அங்கு ஓடிவந்த குடிமகன் ஒருவன், 'அரசர் பெருமானே! நமது தலை நகரத்தை ஒட்டிய காட்டில் அற்புதமான சுனை ஒன்று உள்ளது. அதன் நீர் தேனைக் காட்டிலும் இனிப்பாக உள்ளது. அது போன்ற சுவையான நீரை என் ஆயுளில் நான் எங்கும் குடித்ததில்லை. இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தங்களுக்குச் சொல்லவே இப்படி ஓடி வந்தேன்' என்று மூச்சிறைக்கச் சொன்னான்.

இதைக் கேட்ட எல்லோரும் வியப்படைந்தனர். உடனே அரசன் 'நானும் அமைச்சரும் சில வீரர்களுடன் வருகிறோம். எங்களை அந்தச் சுனைக்கு அழைத்து செல் நீ சொன்னது உண்மைதானா என்று அறிந்து கொள்கிறோம்' என்று சொன்னான். எல்லோரும் புறப்பட்டனர். அவன் வழிகாட்டிக் கொண்டே அவர்களைச் சுனை இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றான். எல்லோரும் அந்த நீரை அள்ளிக் குடித்தனர். அவர்களுக்கு அது ஒன்றும் அதிக சுவை உடையதாகத் தெரியவில்லை. நகரத்திலேயே இதை விட இனிமையான நீர் உள்ளது என்று சிலர் அரசனிடம் சொன்னார்கள்.

அரசன் கோபத்துடன் அவனைப் பார்த்து 'நீயே இந்த நீரைக் குடித்துப் பார் நீ சொன்னபடி இது சுவையாக இல்லையே! ஏன்?' என்று கத்தினான். அவனும் அந்தச் சுனை நீரில் சிறிது அள்ளிக் குடித்தான் 'அரசே நான் குடித்த போது இந்த நீர் மிகவும் இனித்தது இப்பொழுது இது மற்ற நீரைப்போலத்தான் உள்ளது. இதற்குள் என்ன நடந்தது என்று தெரியவில்லை ஒரே மாயமாக உள்ளது' என்றான். அமைச்சரைப் பார்த்து அரசன் 'இவன் உண்மை பேசுகிறானா? இல்லை நம்மை ஏமாற்றி விட்டு இப்பொழுது சமாளிக்கிறானா? ஒரே நாளுக்குள் சுனை நீரில் சுவை எப்படி மாறும், என்று கேட்டான்' அமைச்சர் அவனைப்பார்த்து 'நீ எப்பொழுது சுனையில் முதல்முதலில் நீர் குடித்தாய்? சொல்' என்றார்.

'நான் காட்டில் வழி தவறி விட்டேன். எனக்குக் கடும் நாவரட்சி குடிக்க நீர் கிடைக்காதா? என்று அலைந்தேன். அப்பொழுது இந்தச் சுனை கண்ணில் பட்டது இதில் நீர் குடித்தேன். மிகவும் சுவையாக இருந்ததால் அரசரிடம் சொல்ல ஓடோடிவந்தேன் எனக்கு வேறொன்றும் தெரியாது' என்றான்.

அமைச்சர் அரசனைப் பார்த்து 'நாவரட்சியோடு அலைந்த இவனுக்கு இந் நீர் அமுதம் போல் சுவையாக இருந்ததில் வியப்பில்லை கடும்முயற்சிக்குப்பின் கிடைக்கும் பொருள் மற்றவர் கண்ணுக்குச் சிறுமை உடையதாகத் தோன்றினாலும், அதைப் பெற்றவன் மிகப் பெருமையாகவே கருதுவான் இது உலக விதி. இவன் மீது எந்தத்தவறும் இல்லை' என்று விளக்கம் தந்தான்.

பேராசிரியர் எ.சோதி

## அவசரகால நீடிப்பு

# பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிப்பது நாட்டுக்குச் செய்யும் துரோகம்

### மகாநாயக்கர்கள் எடுத்துரைப்பு

(கொழும்பு)

நாட்டைப் பாதுகாப்பதற்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சகல வேறுபாடுகளையும் மறந்து பொறுப்புணர்ச்சியுடன் அரசுடன் இணைந்து செயற்படவேண்டும் என உடரட்ட அமரபுர மகாநிக்காயா உட்பட 5 நிக்காயாக்களின் மகாநாயக்கர்கள் எதிர்க்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மகாநாயக்கர்கள் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்க்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்ததாவது;

அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தால் அது இந்தநாட்டு மக்களுக்கு எதிரானதாக அமையும்,

இந்த நாட்டு மக்கள அனைவரும் யுத்தத்தை பாரிய பிரச்சினையாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது:

இந்த யுத்தத்தை நடத்துவதற்கு அவசரகால நிலைமையை நீடிப்பது அவசியமாகும்.

எனவே அவசர நிலைமை அமுலில் இருக்க வேண்டியது அவசியம்: முக்கியமாக அவசரகால நீடிப்பு பிரேரணைக்கு யாராவது எதிராக கைஉயர்த்தினால் அது அவர்கள் இந்தநாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்றும் மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளார்கள். (வ)

# ஆலயங்கள் புனரமைப்புக்கு அமைச்சர் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியிலிருந்து வடபகுதி ஆலயங்கள் மற்றும் பாடசாலை புனரமைப்புக்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த வகையில் தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் தேவஸ்தானத்திற்கு 6 இலட்சம் ரூபாவும், கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்திற்கு 7இலட்சம் ரூபாவும் யாழ். இந்து மகளிர் பாடசாலைக்கு 10 இலட்சம் ரூபாவும் கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரிக்கு 9 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும். (உ)

## இராசி பலன்

04-07-2001
(ஆனி 20, புதன்)
சதுர்த்தசி மு இ 7.53 வரை
கேட்டை காலை 7 21 வரை
இராகுகாலம் 11 57- 1.27
நல்லநேரம் 4 27- 5 57
பவித்திர சதுர்த்தசி.

**மேடம்**
ஆன்றோர் ஆசி, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், அச்சமான நிலை.

**இடபம்**
வியாதி, வீண்தொல்லை, பிரயாண பயம், முயற்சிதாமதம்.

**மிதுனம்**
போசன சுகம், அபூர்வ சந்திப்பு, தனவரவு, காரியம் கைகூடும்.

**கடகம்**
வியாதி குணமடையும், தொழில் விருத்தி, சந்தோசமான நிலை, பகைவரால் நன்மை.

**சிங்கம்**
தாழ்வு நிலை, அரசஆதரவு, அவமானம், முயற்சி தாமதம்.

**கன்னி**
காரிய ஜெயம், தன்னம்பிக்கைக் குறைவு, அற்பர்நேசம், கல்வி மேன்மை.

**துலாம்**
இனிய சம்பவம், தனவரவு, சகோதரர் உதவி, அந்நியர் சந்திப்பு.

**விருச்சிகம்**
பொருள் விரயம், மதிப்புக் குறைவு, பெரியோர் வெறுப்பு, காரிய தாமதம்.

**தனுசு**
நல்ல முயற்சி, சயனசுகம், முயற்சி பலிதம், கற்பனை மிகுதி.

**மகரம்**
வீண் செலவு, மனக்கிலேசம், தொழில் நன்மை, காரிய தாமதம்.

**கும்பம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் வரவு, குடும்ப சுகம், பெருமை.

**மீனம்**
சுப நிகழ்வு, தொழில் வெற்றி, கடின உழைப்பு, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

# படையினருக்கு உதவுவது மக்களின் கடமையாகும்

### அமைச்சர் அனுருத்த

[கொழும்பு]

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் போராடும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டு வரும் படையினருக்கு உதவவேண்டியது அனைத்து மக்களது கடமையாகுமென்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

பல்லேகலையில் படையினர் வீடமைப்புக்கிராமத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் பிரிவினைவாதத்திற்கு எதிராகப் படையினர் போராடுகின்றனர். நாட்டைப் பாதுகாக்க அவர்கள் தமது உயிர்களை துறந்து நாட்டுக்காக உழைக்கின்றனர். அத்தகையவர்களின் சேவைக்குமதிப்பளித்து அவர்களுக்கு உதவவேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

அதனை மக்கள் மறந்துவிடாது படையினரின் குடும்பங்களுக்கு உதவிவருகின்றனரென்றும் அமைச்சர் ரத்வத்த கூறினார். [இ]

# புலிகளின் தாக்குதலில் புளொட் உறுப்பினர் பலி

### வவுனியாவில் சம்பவம்

[வவுனியா]

வவுனியாவில் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும், புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் எட்டுமணியளவில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றது.

வவுனியா தெற்கு இலுப்பைக்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ள,

இம்மோதல்சம்பவத்தில்மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த அழகேசு என்ற புளொட் உறுப்பினர் பலியானார். இவரது சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. [ம]

# ஒப்பந்த அடிப்படையில் அஞ்சல் சேவை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்த அடிப்படையில் அஞ்சல்சேவையின் 'பீ' பிரிவில் 1-(ஆ) தரத்தில் அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிகளுக்கு அஞ்சல் திணைக்களத்தினல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கான வயதெல்லை எதிர்வரும் 20 ஆம் திகதியன்று 18வயதிற்குகுறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

க.பொ.த(உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு, க பொ.த(சா.த) பரீட்சையில் ஓர் அமர்வில் கணிதம், மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருந்தால் அதுதொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை அஞ்சல் அதிபதி, அஞ்சல் தலைமை அலுவலகம், கொழும்பு-00100 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தஅடிப்படையில் அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு யாழ்ப்பாணமாவட்டம் எனக் குறிப்பிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ 3)

# மாணவியைத் தண்டித்த அதிபருக்கு அறக்கொடை செலுத்த உத்தரவு

(புலோலி)

வகுப்பறையில்வைத்து மாணவியைத் தாக்கிய அதிபரை ஆலயத்திற்கு அறக்கொடையாக 250 ரூபாவைச் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிவான் எஸ். ஏ ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

வல்வை மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி நகுலாம்பிகை 9 ஆம் ஆண்டு மாணவியை வகுப்பறையில் வைத்து தாக்கியதாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி எஸ். ஏ ஈ ஏகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வகுப்பறையில் மாணவிகள் சத்தமிட்டதைக் கண்டிக்கும் முகமாகவே மாணவியைத் தாக்கியதாகவும்,

தான் மாணவியைத் திட்டமிட்டுத் தாக்கவில்லை என்றும் அப்பெண் அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்;

நீதவான், அதிபரை வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அறக்கொடை நிதியாக 250 ரூபாவைச் செலுத்த வேண்டும்என உத்தரவிட்டார்: (உ 52)

# வடமராட்சி தெற்கு மேற்கு அபி. தொண்டர்களால் சமூக விழிப்பு கூட்டங்கள்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்தித் தொண்டர்களால் அப் பகுதி தனியார்கல்வி நிலையங்களில் சமூக விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன;

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இவ் விழிப்புணர்வுக் கூட்டத்தின் முக்கிய குறிக்கோளாக மது ஒழிப்பு, வீதி விபத்துக்களைத் தடுத்தல், சிறுவயதுத் திருமணங்களைத் தடுத்தல் ஆகியன அமைந்துள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் இற்றைவரை 10 இற்குமேற்பட்ட இவ்வாறான கூட்டங்கள் நடத்தப் பட்டிருப்பதாகவும்,

கிராமிய மட்டத்தில் இக் கருத்துக்களை வலியுறுத்தி தெருக் கூத்து, நாடகங்கள் என்பவற்றை நடத்த திட்டமிடப்பட்ட அபிவிருத்திப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (உ-23)

# மகியங்கனை படுகொலை

### 19 படையினர் ஆஜர்

மகியங்கனைபடுகொலைவழக்குநேற்றுமுன்தினம்கொழும்பு மேல் நீதிமன்றத்தில்நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது;

படுகொலைச் சம்பவத்தின் சூத்திரதாரிகளென சந்தேகிக்கப்படும் 19 படையினரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்;

இவ்வழக்கு விசாரணை இன்றும் நடை பெறும்.

இதே வேளை இப்படுகொலைச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருபடையினர் மரணமடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 24

### ஆக்கம்: செல்வி

★ **பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.**

01) முடி———————
02) பாவலன்———————
03) பாங்கி———————
04) குஞ்சரம்———————
05) மயூரம்———————

★ **பின்வரும் சொல்வரிசையில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக?**

06) அப்பா, அம்மா, அண்ணி, தம்பி, அண்ணா
07) ஆமை, மீன், றால், நண்டு, கணவாய்
08) மல்லிகை, முல்லை, செவ்வந்தி, பாரிஜாதம், நந்தியாவர்த்தம்
09) நாய் பூனை, சிங்கம், பசு, ஆடு
10) வந்தான், இருந்தான், ஆடினான், படிக்கிறான், ஓடினான்

★ **பின்வரும் சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.**

பனிக்கட்டியினால், காட்டில், மண்புழு, கூடு, செவ்விந்தியர்கள்

11) பறவைகள் மரங்களில் ——————— கட்டி வாழ்கின்றன
12) கொடிய மிருகங்கள் ——————— வாழ்கின்றன.
13) எஸ்கிமோவர் வசிக்கும் வீடுகள் ——————— ஆனது
14) அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் ——— ஆவர்
15) ——— விவசாயிகளின தோழன் எனப்படும்

★ **சரியான விடையின் கீழ்கீறிடுக.**

16) திண்மம், திரவம, வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் இருக்கக் கூடிய பொருள எது?
அ) விறகு ஆ) நீர் இ) மண்ணெண்ணெய்
17) மலைககுகை ஓவியங்களுக்குசரித்திரப் பிரசித்தி பெறாத இடம் எது?
அ) அஜந்தா ஆ) சித்தன்னவாசல் இ) கண்டி
18) மகாவலிகங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?
அ) கண்டி ஆ) கொழும்பு இ) திருகோணமலை
19) இலங்கையின் உயரமான நீர் விழ்ச்சி எது?
அ) பம்பரகந்தை ஆ லக்ஷபானா இ) விக்டோரியா.
20) கண்டிப் பகுதியில் அதிகளவில் பயிர் செய்யப்படும் ஒரு தாவரம் கூறுக?
அ) றப்பர் ஆ) தெங்கு இ) தேயிலை
21) மலர் அஞ்சலி என்னும் சொலலில் உள்ள 'அஞ்சலி' குறிப்பிடுவது?
அ) வழிபாடு ஆ) பெயர் இ) நினைவுமலர்
22) பாம்பு போன்ற உருவத்தில் நீரில் காணப்படும் மீனினம் எது?
அ) விலங்கு ஆ) சுறா இ) திமிங்கிலம்
23) பழவகைகளில் காணப்படும் உயிர்ச் சத்து எது?
அ) B ஆ) C இ) A

★ **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

24) School ———————
25) Temple ———————
26) p st ffice ———————
27) Thank you ———————
28) Lion ——————

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.**

29) ஒரு ஆரஞ்சுப் பழத்தை 10 ரூபாவிற்கு விற்று 2 ரூபா இலாபம் பெறும வியாபாரி, ஒரு நாளில் ரூபா 100 இலாபம் பெற்றால் அவன் எத்தனைபழங்கள் விற்றான்?
30) ராஜி 30 மிட்டாய்களை வாங்கி அதில் 5ஐ ரூபிக்கும் 4ஐ மஞ்சுவிற்கும் கொடுத்தாள். ராதாராஜிக்கு12மிட்டாய்கள கொடுத்தாள் எனில் இப்பொழுது ராஜிபிடம் இருக்கும் மிட்டாய்கள் எத்தனை?

★ **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

31) அசுத்தமான நீரில மீனகள நன்கு வளரும் ( )
32) கீரை வகைகளில் இரும்புச் சத்து உண்டு ( )
33) தீக்கோழியால் பறக்க முடியும் ( )
34) இலங்கையின் தலைநகரம் கண்டி ஆகும் ( )

★ **கீழே (அ) பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுடன் தொடர்புடைய சொற்களை (ஆ) பகுதியிலிருந்து தெரிவு செய்து தொடர்பு படுத்துக.**

| | அ | ஆ |
|---|---|---|
| 35) | 75 வது ஆண்டு | வளியில் கலந்துள்ளது |
| 36) | வியாழன் | மின்சாரத்தைக் கடத்தாது |
| 37) | நைதரசன் | விலைகூடியது |
| 38) | பயறு | கிரகம் |
| 39) | கண்ணாடி | பவளவிழா |
| 40) | தங்கம் | ஒரு வகைத் தானியம் |

**குறிப்பு:-**

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 09-07-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## பொதுச்சபைக் கூட்டம்

(சங்கானை)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் மேற்கில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை தலைவர் வீ. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2001 ஆம் ஆண்டுக்கானபுதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது

அதனைத் தொடர்ந்து சனசமூக நிலையத்தின் சுற்றாடலில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன.

(உ)

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல-23 விடைகள்

01) மேகம்
02) மாலைப் பொழுது
03) அ) ஆச்சரியம் ஆ) நிறம்
04) பழங்கள்
05) நாடுகள்
06) புடவைகள்
07) நட்பு
08) நவீனம்
09) காழ்வு
10) Twelve
11) Nose
12) Running
13) Today
14) Coconut
15) Hospital
16) ஆபிரிக்க நாட்டில் வாழும் அதிகளவானமக்கள் உணவுத்தட்டுப் பாட்டினால் அவதியுறுகின்றனர்.
17) மாலை மயங்கி இருள் சூழும்போது சில பிராணிகளின் தொழிற்பாடு அதிகரிக்கும்.
18) சரி
19) சரி
20) சரி
21) சரி
22) $43\frac{1}{2}$ kg
23) 2kg
24) (அ, 2m
(ஆ, 128 ரூபா
(இ, 228 ரூபா
25) 19 ஆம் திகதி
26) வடகிழக்குத் திசை
27) i) உபயோகமற்ற நிறக்கடதாசிகள்
ii) உபயோகமற்ற புடைவைத்துண்டுகள்
iii) பசை
28) i. வெண்டிக்காய்
ii) நாணயக் குற்றி.
iii) பப்பாக்காய்
29) 1) துணி 2) கத்தரிக்கோல்
3) தையல்ஊசி, நூல்
30) வளியில் நீராவி உண்டு என்று
31) 38, 30
32) 510,535
33) 2012 ஆம் ஆண்டு
34) றெக்சன்
35) 130 மாபிள்கள்
36) அகிம்சன் தன்னம்பிக்கையுடையவன்
37) யூலி குறும்புத்தனமும், கவனக்குறைவும் தன்னலமும் உடையவள்
38) நந்தகுமார் பார்வைக் குறைபாடுடையவன்
39) "பண்பட்ட மனிதர்கள் மனித மனங்களைப் புண்படுத்தமாட்டார்கள். மற்றவர்களது மகிழ்ச்சியை மனதார விரும்புவார்கள் இல்லாமை இல்லாத நிலைவேண்டி கல்லாத மனிதர்களையும் நல்லாக வாழவைப்பார்கள். அன்றோடு அறநெறியிலே அனைவரையும் வாழவைப்பார்கள்.
40) Bountry

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல- 23

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) செ திவேஜன், யாழ் மத்திய கல்லூரி
02) கு.சிந்துஜா, வல்வை மகளிர் வித்தியாலயம்
03) பி.பிரதீபா,வல்வை சிவகுரு வித்தியாலயம்
04) சி துளசிதா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
05) செ.குலராஜ், உடுப்பிட்டி அமெரிக்கமிஷன்
06) சி. ஜெயதாரகா, கம்பர்மலை அ.த.க.பாடசாலை
07) உ. விஜீத் யாழ் மத்தியகல்லூரி
08) சி.நிருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
09) ஜெ சாரங்கா, யாழ் இந்து ஆரம்பபாடசாலை
10) பு. சுயானா, வல்வை.அ மி த.க பாடசாலை
11) ச.பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
12) இ.ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்
13) க. கஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
14) அ. கஜேந்திரஜன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
15) அ. தர்ஷிக். மயிலிட்டி றோ.க.த.க வித்தியாலயம்
16) அ. விஸ்ணுஜா, கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
17) க.நிரோஜினி, யாழ்.புனித மரியாள் வித்தியாலயம்
18) ச. கணேஸ்பரன். கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
19) தி. பிரசாந். அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
20) ப. அஜந்தன், யாழ்.மத்திய கல்லூரி
21) இ. தர்சன், யாழ் மத்திய கல்லூரி
22) தி. சுனம் ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
23) சி,நிரோஜினி, வல்வை ம.ம. வித்தியாலயம்
24) இ. எட்வேட் எடின் யாழ் மத்திய கல்லூரி
25) இ.சிவனேஸ்வரன், வல்வை சிவகுரு வித்தியாலயம்
26) த. ஏகவரதன், யாழ் இந்து ஆரமபப்பாடசாலை
27) கு.ஜெசாமினி,யாழ் தாவடி இ த க பாடசாலை
28) மோ.ஜீர்த்தன். யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி
29) சி.துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
30) சி. கெங்காதரன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
31) அ. யூட்சன், யாழ், மத்திய கல்லூரி
32) இ.சகிலா, இமையாணன் அ த.க வித்தியாலயம்
33) க. பார்கவி, கச்சாய் அ.த.க பாடசாலை
34) உ. நிவேதா, வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி
35) அ.வஜீரன், யாழ்.பரியோவான் கல்லூரி
36) ச.நிபோஷன், யாழ் மத்திய கல்லூரி
37) ஜெ சந்துருகேசன், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
38) சி.டிலீப், யாழ் மத்திய கல்லூரி
39) ச நிவேதிகா. கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
40) த.ரூபேட்எமில்ரன், ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை
41) ம தினேஷ். வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
42) நா. அனோஜினி, யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை
43) இ. நிருஜன், பெரியபுலம் மகாவித்தியாலயம்
44) சீ. மேரிஜீவனா, சில்லாலை றோ.க த.க பாடசாலை
45) ச. மதுஸ்னன், யாழ் மத்திய கல்லூரி
46) கு.ஜெரின் யாழ் மத்தியகல்லூரி
47) சு. கோகுலன், புற்றளை மகாவித்தியாலயம்
48) வி.கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
49) அ.நிருபன். துன்னாலை மெ மி த.க பாடசாலை
50) ஸ். ஸ்ரனிஸ்ராஜ், யாழ்.மத்திய கல்லூரி

**கல்விப் பகுதி**

**வினா இல - 24**

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு.

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ……………………

சொந்த முகவரி: ……………………

கற்கும் பாடசாலை : ……………………

மாணவர் கையொப்பம் : ……………………

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## தொழில் முயற்சிக் கடன்

பொலிகண்டியில்உள்ள பலாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் வைத்து அண்மையில் சங்க அங்கத்தவர்கள் 0 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டது.

கெயர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இக் கடன், 18 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டது. (உ-111)


**ஊர்தோறு, . , . .**

அதிகாலை தேரிலே நாகம்மாள் எழுந்தருளும் அற்புதக் காட்சியைக் காணவென அடியார் கூட்டம் அலையலையாக நயினாதீவுக்கு வருகை தருவார்கள். வருடத்திற்கொருதடவை நயினையிலே மக்கள் வெள்ளம் பெருக்கெடுத்தோடும் பெருவிழா தேர்த்திருவிழா. கம்பீரமாக விளங்கும் திருத்தேரிலே அம்பாள் ஆரோகணித்து விநாயகருடனும், முருகனுடனும் அலங்காரமாகக் காட்சியளித்தருள்புரியும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும் மும்மூர்த்திகளுக்கும் என அமைக்கப்பட்டுள்ள தேர்களிலே திருவருள் நோக்கஞ் செய்து நிற்கும் இன்றைய நன்னாள் அன்பர்களுக்கும், அடியார்களுக்கும் பேரின்பம் தருந்நிகழ்வாகும். மணிகள் ப்ரசப்திக்கின்ற மணித்தேர்களிலே மணித்தீவிலுறை மணித்தெய்வம் திருவருள் பாலிக்கின்றாள்: இக்காட்சியைக் காணவென இங்குவந்த அன்பர் வாழிய! நயினைக்கு வாராமல் தமது வாழிடங்களிலேயிருந்து கொண்டு அம்பாளைச் சிந்தித்து நிற்கும் அன்பு நெஞ்சங்கள் வாழியவே

# நயினாதீவு நாகபூஷணி அம்மன்

# இரதோற்சவ சிறப்புமலர் - 2001


சாந்தி சமாதானத்துடன் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ இன்று தேரேறி வலம் வரும்
நயினை நாகபூஷணி அம்மனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.
அழகிய வண்ணங் கொண்ட மின்னிடும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நகரில்
நாட வேண்டிய இடம்



மதனா ஜுவல்லறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்

177|3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இணை நிறுவனம் :

மைதிலி ஜுவல்லறி

190A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/1822)

நாட்டு மக்கள் அனைவரும் சாந்தி சமாதானத்துடன் வாழ்ந்திட
நயினை நாகபூஷணி அம்மனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.
எழில் குன்றா தங்க-வைர ஆபரணங்களின் சாம்ராஜ்யம்



நியூ விதுஷா நகைமாடம்

191 H. K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்)

கிளை நிறுவனம்:-

விதுஷாயினி நகை மாடம் சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.

[C-1825]

பார் போற்றும் மணிபல்லவத்தின் நாயகிக்கு இன்று தேர் உலா!
அவள் பாதம் நாடினோருக்கு இன்று அருள் விழா!

★ புத்தம் புதிய ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிளா?
★ MD-90 றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிளா?
அவற்றுக்கான உதிரிப் பாகங்களா?
அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

103, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அருள் விநாயகர் ரேடர்ஸ்

106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: பிரதான வீதி,
சங்கானை.

(C-1830)

# 'நயினாதீவு நாகபூஷணி அம்மன்

## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### பகைமை துன்பம் முற்றாய் முடித்திடத் தேரினில் வருக!

படைக்கும் பிரமன் பார்த்த சாரதியாய் (ப்)
பக்குவப் புலன்களைச் செலுத்த;
புடைக்கும் சக்கரம் திருமால் உருட்டிப்
புவிமிசை வலமாய்ப் புகுத்த;
சடைச் செஞ் சிவனார் சக்தியாய் நயினை
சார்ந்துள புனிதத் தாயே!
முடைக்கும் பகைமை துன்பம் முற்றாய்
முடித்திடத் தேரினில் வருகவே!

நயினைச் சோதி

### இருள் நீக்க வாருமம்மா

எடுப்பு
அருளொழுகும் நயினையிலே குடியிருக்கும் அம்பிகையே
ஆதிமுதல் எம்துயரம் நீக்கி வந்த சுந்தரியே
தொடுப்பு
இருள்கெடுத்து ஒளி நிலவைக் காட்டியதும் உன்னருளே
ஈசனது கழுத்துமணி மாலையாகி நின்றவளே
முடிப்பு
கருணையினால் கடல்நடுவே இருந்தாட்சி புரிபவளே
கண்திறந்து எமைக்காக்க தேரேறி வாருமம்மா
அருளொளியைத் தருபவளே ஆதிபுவனேஸ்வரியே
ஆனந்த ரூபிணியே தேரில்வலம வந்தருள்வாய்

சு. குகதேவன்
க. கு. அ. இல- 117
தெல்லிப்பழை

### கொடித் தேரின் வடம் பிடிப்பார்

அலைகடல் சூழ்ந் தார்ப்பரிக்கும்
நைனா தீவில்
அன்னையவள் ஆரோக
ணித்துத் தேரில்
நிலவிடவே யுள்ளபெருங்
காட்சிகாண
நீள்கிழக்கில் கதிரவனும்
நெடிது பார்ப்பான்
உலகமெலாந் தன்குடைக் கீழ்
ஆளுமன்னன்
யுயர்ந்தபா தந்தொழுது
வரங்கள் வேண்ட
குலவிடுநம் மக்களெல்லாம்
கும்பிட் டேத்தி
கொடித் தேரின் வடம் பிடிப்பார்
கூவிக் கொண்டே.

முது பெரும் புலவர்
வை. கா. சிற்றம்பலம்

### மண் சேரக் கருணை செய்தாயே!

தேரிலேறும் தேவியே தேற்றிவிடு எம்மை[ப்]
பாரினிலே மாந்தர் பட்டதுயர் போதுமம்மா
கொஞ்சுதமிழ் பேசும் குவலயத்து மாந்தரெலாம்
சங்கொலி முழங்க சங்கரியே சரணடைந்தோம்
அஞ்சலென்று எம்மை அணைக்கும் அம்மையே
வெஞ்சமரை உன்தன் கருவிழியால் வேரறுத்து
ஏங்கித் தவிக்கும் ஏழைகள் எம்மைச்
சொந்த மண் சேரக் கருணை செய்தாயே !!!

செல்வி சி. கௌசல்யா
க. கு. அ. இல-181

## ஆசிச் செய்தி

### "தாயே ஆகி வளர்த்தனை"

நாக பூஷணி என்றஇந்த நாமம் பூண்ட ஒருசக்தி. உலகத்திலே வேறுஎங்கும் இல்லை இலங்கையில் யாழ்ப்பாணக்குடாநாட்டிலே உள்ள சப்ததீவுகளில் ஒன்றான நயினாதீவில் எழுந்தருளி இருக்கும் ''கைபுனைந்தியற்றாக் கவின்பெறுசக்திக்கே'' முற்றுமுழுதாகப் பொருந்தும் என்று இவ்வாலயத்தை தரிசனம் செய்ய வந்த தமிழ்தந்த உ. வே. சாமிநாதையரின்முதன் மாணாக்கரும் தமிழ்ப் பேரறிஞருமான கி.வா. ஜகந்நாதன் தனது மாத வெளியீடான கலைமகளில் 1961ல் தெளிவுபடக் கூறியதோடு ''நாயகி நான்முகி'' என்ற அபிராமி அந்தாதிப் பாடலுக்கு உரைஎழுதிய போதும் ஆணித்தரமாக இந்த நாமத்திற்கு உரியவள நயினாதீவு ஸ்ரீநாகபூஷணிதான்என்றும் கூறியிருப்பதை காணமுடிகின்றது.

இங்கு வருகைதந்து தம்நேர்த்திகளைச் செய்துகொண்டு செல்பவர்கள் ஒருவருடத்துக்குள் தமது வேண்டுதல்கள்யாவும் நிவர்த்தியாகியபின் மீண்டும்வருகை தந்து அன்னைக்குவாரிக் கொடுத்து விட்டு காதலாகி கண்ணீர்மல்கி தாம் பெற்ற பேற்றினைக் கூறுவதனையும் கண்ணாரக்கண்டு காதாரக்கேட்டும் உள்ளம் பூரிப்பவன் யான்.

#### அன்னதானப் பணி

தற்போது நயினாதீவு ஒருகல்விச் சுற்றுலாத் தலமாகவும் பிரபல்யம் அடைந்திருப்பதால் பிறமதப்பெரியார்களும்மாணவர்களும் கூடவருகை தந்து செல்கின்றார்கள்; ஆனால் வந்து செல்லும் ஒருஅடியவர் தானும் பசியோடு போகக் கூடாது என்ற பெரும் நோக்கில் கோவில் அறங்காவலர் சபையினர் கோவில் வடக்கு வீதியில்உள்ள கல்யாணமண்டபத்தில்1998ம் ஆண்டு முதல் நித்திய அன்னதானப் பணியைச் சிறப்பாக செய்து வருகின்றார்கள். இப்பணியால் மேலும் மேலும் அன்னையின் ஆலயத்தின் பெருமை உலகம் எங்கும் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றதை எமக்கு வரும் அஞ்சல்கள் மூலம் அறிய முடிகின்றது ஆபுத்திரன் அமுதம் அளித்துப் பெருமை பெற்றமண் இம்மண் அவனைத் தொடர்ந்து மணிமேகலை அன்னம் அளித்து பசிதீர்த்த பெருமை கொண்டதலம் இத்தலம்.

இவ்வருடம் இடம் பெறும் தேர்த் திருவிழாவுக்கு பெருந்தொகையான அடியார்கள் வழக்கத்திலும் பார்க்க அதிகஎண்ணிக்கையில் வருவார்கள் என்ற அடிப்படையில்அறங்காவலர் சபையினராகியநாம் யாழ் அரச அதிபர் செயலகம், வேலணை பிரதேச செயலகம் மற்றைய அமைப்புக்களுடன் இணைந்து பலவிதமான ஒழுங்குகளையும் செய்துள்ளோம். வேண்டுவார் வேண்டுவதை அளித்தருளும் அன்னை தனது தேர்த்திருவிழாவுடன் இந்த நாட்டில் சாந்தியும்சமாதானமும்நிலவத்திண்ணமாக அருள் புரிவாள் என்ற பூரணமான நம்பிக்கையுடன் வருகைதரும் அனைத்து அடியார்களும் அன்னையைத்தரிசித்து எவ் விதமான துன்பமும்இன்றித் தத்தமது இல்லங்கள்சென்று சேர வேண்டும் என வேண்டுகின்றோம்.

கா. ஆ. தியாகராசா
தலைவர்
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்

### நாகம்மையைப் பூசி

அகில சராசரங்களையும் படைத்துக் காத்தருள் புரியும் பேராற்றல் வாய்ந்தவள் அம்பிகை. செய்வதறியாது தடுமாறும் மனித மனங்களிலே குடி கொண்டு உணர்வெழுப்பி வாழ்வளித்து வருபவள் அம்பாள். அம்பிகையைச் சரணடைந்து விட்டால் அதிக வரம் பெற்று விடலாம் என்பது ஞானவான்களது பேரனுபவமாகும். வரமருளும் நாயகி என்று போற்றப்படுபவள். நமது நாகபூஷணி அம்பாள். அடியார்கள் தமது இஷ்டசித்திகளைப் பெறுவதில் நயினைத்தாய் முன்னின்று உதவுபவளாவாள். எனவே அம்பாளைத் தொழுது வணங்கி அவளருள் பெற்றுய்வோமாக.

சுபம்

கனக-ஜீவசீலன்
பொருளாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அமமன் கோவல்

### வாழ்த்துச்

வரலாற்றுச் சிறப்புவாய்ந்த
யம் மிகவும் தொன்மைவாய்ந்
யிலே விளங்கும் அறுபத்திநான்கு
றான இவ்வாலயம் மணித்தீவுப் பு
கப்பட்டதென்பர்.

திருக்கோயில்களில்நித்தியபூ
பூசையில் ஏற்படும் குறைபாடுக
திய பூசைநடைபெறுகின்றன.
மஹோற்சவத்தில் தேர்த்திருவிழ
'அமபாள் எமக்கு வேண்டியவற்
உலகெலாம் தீபன அகன்று
மென்று இந்தநன்னாளில் நாமும்

ந.
வலி.மேற்கு பிர

### வரமருள் வா

மனிதர்களது வேண்டுதல்
குறைகளைப் போக்கியருள் புரியு
என்று பெயர். சக்தி தத்துவம்
கனிவது. இரக்கம், அருள், அன்பு
என்னும் இவற்றிற்கெல்லாம்
பவள நயினை ஸ்ரீநாகபூஷ
கள் நிறைந்த சக்தி தத்துவம்
அம்மன் கோவிலிலே உண்டு என்
மெய்ப்பித்துள்ளனர். கலையாத
கபடுவாராத நட்பு, கன்றாதவள
கழுபிணியிலாத உடல், சலிய
மனைவி, தவறாதசந்தானம்,
வார்த்தை, தடைகள் வாராதசெ
யம், கோணாத கோல். துன்பமில்
களை அம்பாள் தந்தருளவேண்டு
பிரார்த்தனை. வரமருள்வாய் ந

கு. சரவ

பரம்ப
ஸ்ரீ நாகபூஷண
நயி

### வரம்தரும் நா

ஐந்து தலை நாகத்தில் அமர்
தலைப போக்குபவள்அன்னை ஸ்ரீ
பங்கள் பார்க்கும் போதே கேட
னையின் ஐந்து தலை நாகம்
இருந்து எம்மைப் பார்க்கும் போ
கும சக்தி படைத்தது. மூல மூர்த்
எழுந்து ஆடி நிற்கின்ற அருள் ஒழு
மாளின மாட்சி,

நயினையில் உதித்த நயினா
போற்றப்படும் முத்துக்குமார சுவ
பாடல் பல செரிந்துள்ளார்கள்.
வேண்டி நிற்போர் கோடி கோடி

அம்பிகையின் தேர்த் திருவிழ
டங்களையும் ஈன்ற அன்னை திரு
கொள்ளாக் காட்சி.

அல்லி அரசாணி ஆட்சி செய்
மந்திரிமார் பிரதானிகள பணியா
ளாகவே இருந்தார்களாம். அது
கிய நயினை ஸ்ரீநாகபூஷணி அம்ம
தேரும் சக்திகட்கே முதலிடம் கொ
ளது.

அம்பாளின் சித்திரத் தேர் பவ
டம் என்றால், நவசக்திகளின் ஒன்
லாம். உறைகின்ற கோணங்கள்
தேவியின் திருத்தேர்ப் பவனியைக்
இழுப்பதும் அருள் ஒழுகு அன்னைய
பதும் நாம் செய்த பூர்வ புண்ணிய

கனகசபை உரு
B. A.

அறங்
நயினாதீவு ஸ்ரீநாகபூஷண


அலைகடல் மத்தியில் அருளாட்சி புரிகின்ற நயினை அம்பிகையின்
அருள்வேண்டி நிற்கின்றோம்!
காலத்தால் அழியாத மின்னிடும் தங்க, வைர ஆபரணங்களின்
சோலை
ஸ்ரீ வாணி நகை மாடம்
★ தங்கப் பவுண் நகை வியாபாரம் ★
173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1833)

பக்தர் நலம் காக்க இன்று தேரேறி உலாவரும்
அருள்வேண்டி நிற்கின்றோ
அற்புதமான வடிவமைப்புக்களைக் செ
தங்க நகைகளுக்கு .
நிருத்திகா ஜு
177, கஸ்தூரியார் வீதி,
T.P- 021-26

# ன் இரதோற்சவ சிறப்புமலர் - 2001

## துச் செய்தி

ாய்ந்த நயினாதீவு அம்பாள் ஆல
வலைகடலின் மத்தி
நான்கு சத்தி பீடங்களுள் ஒன்
தீவுப் புவனேஸ்வரி என அழைக்

த்தியபூசைநடைபெறுகின்றது. அ
பாடுகளைத் தீர்ப்பதற்கு நைமித்
றன. நைமித்திய பூசைஎன்னும்
திருவிழா சிறந்தது.
டியவற்றையெல்லாம் தருவாள்'
அகன்று நல்லன பெருக வேண்டு
நாமும் பிரார்த்திப்போமாக.

ந. திரிலோகநாதன்
ற்கு பிரதேச சபைத்தலைவர்.

## வாய் தாயே!

ண்டுதல்களைக் கேட்டு அவர்களது
ருள் புரியும் பேராற்றலுக்குச் சக்தி
துவம் தாய்மையில் பழுத்துக்
. அன்பு. அறிவு. கலை பணபாடு
லாம் மூலவித்தாக விளங்கி நிற்
ாகபூஷணி. அற்புதத் தன்மை
த்துவம் நயினை ஸ்ரீ நாகபூஷணி
ண்டு என்பதனை ஞானவான்கள்
லையாத கல்வி, குறையாத வயது,
றாதவளமை, குன்றாத இளமை,
சலியாத மனம், அன்பகலாத
னம், தாழாத கீர்த்தி, மாறாத
ாராதகொடை, தொலையாத நிதி
துன்பமில்லாத வாழ்வு ஆகிய பேறு
வேண்டும் இதுவே என்உளமார்ந்த
வாய் நாகபூஷணியே!

. சரவணபவானந்தன் J P
B A Dip in Ed
பரம்பரை அறங்காவலர்
ாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

## ம் நாகபூஷணி

தில் அமர்ந்து அடியார்கள் அஞ்சு
ன்னைஸ்ரீநாகபூஷணி அம்மன். சர்ப்
த கேட்கும்ஆற்றல்உடையவைஅன்
கம் சுலமூர்த்தியாக சுயம்புவாக
தம் போதே எமது குறையை கேட்
ல மூர்த்தியின் ஐந்து தலை நாகம்
ருள் ஒழுகு காட்சி நயினைநாகம்

நயினாதீவுச் சுவாமியார் எனப்
மார சுவாமியார்அம்மைமீது அருட்
ார்கள். தரணி தனில் சாந்திதனை
டி கோடி;

திருவிழாவான இன்று அகிலஅண்
னை திருத்தேரில் வருவது கண்

ட்சிசெய்த பொழுது அவளுக்கு
பணியாளர்கள்எல்லோரும்பெண்
ம் அதுபோலவே உலக மாதாவா
ணி அம்மன் எழுந்தருளும் சித்திரத்
டம் கொடுத்து அமைக்கப்பட்டுள்

தேர் பவனி வருவது 45வது வரு
வின் ஒன்று கூடல் வருடம் என
ளங்கள் ஒன்பதும் மேவி உறையும்
னியைக். காண்பதும் வடம்பற்றி
அன்னையின் திருவதனம் காண்
புண்ணியமே.

பெ உருத்திரகுமாரன்
B. A. Dip. in Ed.
செயலாளர்
அறங்காவலர் சபை
ாகபூஷணி அம்மன் கோவில்

## ஊர்தோறுமிருந்து மக்கள், உலகாளும் நாயகி

## தேருநம் திருக்காட்சி காண திரளுகின்றனர்



நயினை நாகபூஷணி அம்மனின் தேர்த்திருவிழா மிகுந்த பெருஞ் சிறப்புடையது ஏனெனில் பாரம்பரியம்மிக்க திருத்தேர்களும், பக்தகோடிகளின் மனோநிலை ரம்மியமும் தேர்த் திருவிழாவின் பக்தி மாண்பினை வெகு துல்க்கஞ் செய்துநிற்கும் தன்மையாகும். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தல வரலாற்றுப் பெருமையுடனும் மணிமேகலைக் காப்பியவரலாற்று சிறப்புடனும் விளங்குவது நயினைத்தலமாகும். எத்தனையோ இயற்கைச் சீற்றங்களுக்கெல்லாம் முகங்கொடுத்து இன்றும் தன்னளவிலே தன்னிறைவு கொண்ட உன்னத கலாபீடமாகத் திகழ்கின்றது. ஸ்ரீபுவனேஸ்வரி பீடம் இவ்வாண்டு உயர் திருவிழாக்கள் வெகுவிமரிசையுடன் நடைபெற்று இன்று தேர்த்திருவிழா நிகழ்கின்றது சமூகம், பண்பாடு, பக்தி, கலாசாரம், விழுமியங்கள், நம்பிக்கைகள், கனவுகள், நேர்த்திகள், உணர்வுகள் என்பன ஒன்றித்த நிலையில் மக்களது வாழ்வியல் ஓட்டத்தில் வெகு சிறப்பான இடத்தினை வகிப்பது தாய்த் தெய்வ வழிபாடாகும். இவற்றுள்ளும் இன்று தலைமை பெற்ற சக்தித் தலமாகவும் புகழ்பெற்ற வரலாற்றுத் தலமாகவும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில் இலங்குகிறது.

### தேருநம் காட்சி

நயினை நாகபூஷணியின் தனிச்சிறப்பு அவள் நாகபாம்புருவில் அன்பர்களுக்குக் காட்சி கொடுத்து அருள்புரிவதாகும். இத் தன்மை காலாதிகாலமாக இன்றுவரை நடைபெறுவதாகும். இத்தகு மாண்பும், அருள் வீச்சும் மகிமையும் பிற தலங்களிலே இலங்கையிலே காணுவது அரிதாகும். சக்தி பீடம் என்ற பெருமையுடன் விளங்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் ஆலயத் தேவைகள் அவளருளாலேயே ஈடேறுகின்றன. 'பக்தி' என்பது மிகவும் நுண்ணிய அருட்டுணர்வு'. இது பொங்கி எழும்போது மனிதனுக்குள்ளிருக்கும் அபூர்வப் பேராற்றல்மேலெழுகின்றது. மனிதனுக்குள்ளிருக்கும் மிக நுட்பமான மெய்ப்பாட்டுடன கூடிய பக்திஎனும் பண்பு வெளிப்பட்டு மனுக்குலத்தை ஈடேற்றும் திருவிழாவாக அமைவது அம்பாளது தேர்த்திருவிழா வாகும். முப்பெருந் தேர்களும் இன்று விநாயகப்பெருமான், வள்ளி தேவசேனாசமேத முருகப் பெருமான் சகிதமாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்உலக நன்மையின பொருட்டுத் தேரிலே எழுந்தருளி இவர்ந்தருளகின்றனர். நயினைத் தேர் பிரத்தியட்சமான காட்சியாகும். அதாவது மன அமைதியையும் தெய்வநம்பிக்கையையும் நல்கும் திருவிழாவாக இரதோற்சவம் அமைகின்றது.

### சர்வ தேசத்தினரும் போற்றுகின்றனர்

''திருவாரூர் தேரின் மகிமை சைவஉலகினராலே வெகு சிறப்புடன் பேசப்படுவது போலவே திருநயினைத் தேரும் இன்று சர்வ தேசத்தினர்களாலும் போற்றப்படுகிறது'' காரணம். இன்று பல்வேறு சம்பவங்களினாலும் இருப்பிடம், வதிவிடம் இழந்து, சொத்து சுகம் இழந்து, துன்பமே இயற்கையானதோ? என்று எண்ணியவர்களாக அலைகளாகவும் அநாதைகளாகவும் அகதிகளாகவும், வாழும் நம்மினத்து மக்கள் மனங்களிலே ஒரேயொரு நம்பிக்கைக் கீற்றாக விளங்குபவள் நயினை ஸ்ரீநாகபூஷணிஅம்மன்தான்.

### பல்வேறு மரபுகள்

நம் மூதாதையர்கள், அம்பாளைக் கல், மரம், ஓவியம், சிற்பம், சித்திரம், கலை, கற்பனை, உருவமென்னும் நிலைகளிலே கண்டு தர்சித்துள்ளனர் என்பது சைவாலய வரலாற்று செய்திகளிலிருந்து அறிய முடிகின்றது. கற்கோயிற் திருப்பணி மற்றும் பல்வகைப்பட்ட கோயில்கள் இருந்துள்ள வரலாற்றினை நமது புராணங்களும், திருமுறைகளும் எடுத்தியம்பி நிற்கின்றன. தமிழகத்திலும்சரி, இலங்கையிலும்சரி, ஆலயங்கள் ஏதோவொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டே நிலைபேறுடையனவாக மிளிருகின்றன. அரசர்பாரம்பரியம், பக்திப் பாரம்பரியம், தெய்வப்பாரம்பரியம், வம்சப்பாரம்பரியம் என்னும் வகைகளிலே கோயிற் பண்பாட்டினை வரலாற்றாசிரியர்கள், பகுத்தாராய்வாளர்கள், குலமரபு, குடிமரபு, தெய்வமரபு, கலை பண்பாட்டுமரபு, பக்திமரபு, பதிகமரபு, பாரம்பரியமரபு என்று பல்வேறு மரபுகள் கிளர்த்தி ஆராயத்தக்கவகையிலே அமைவன திருத்தல வரலாறுகள். நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலின் வரலாறும் இதர அம்சங்களும் இத்தகு அறிவாராய்ச்சி அனுபவ வாராய்ச்சிப் பின்னணிகளுடன் ஆழமாக ஆராயப்பட வேண்டும் என்ற கருத்தினையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

### மக்கள்கூட்டம்

தேர்த்திருவிழாவுக்கு முதல் நாளே இச்சிறுதீவிலே மக்கள் கூட்டம் பெருகிவிடும்

(8ம் பக்கம் பார்க்க)

லாகீச கலாநிதி
**கனகசபாபதி நாகேஸ்வரன்**

தேரேறி வீதி உலா வரும்
நயினை நாக பூசணி அம்மனே!
''நாட்டில் சமாதானம் ஏற்பட
உன் பாதார விந்தங்கள் சரணமம்மா''

இல்லங்களில் இடம் பெறும் நிகழ்வுகளை
உயிரோட்டமுள்ள
அழியா நினைவலையாக்கிட...
இன்றே நாடுங்கள்!

கோபி போட்டோ அன் வீடியோ


154/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[C/1828]

லாவரும் நயினை நாகபூஷணியின்
ற்கின்றோம்

ளக் கொண்ட அசல் 22 கரட்
ளுக்கு...

ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்.
-2694
(கி-1834)



பாரெல்லாம் நயினை நாகபூஷணி அம்மனின் அருள்பெற வேண்டிநிற்கிறோம்!

V-S-P லஞ் ஒயில்
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்.

பரிமளா ஸ்ரோர்ஸ்

26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1837) போன்: 021-2785

# நயினாதீவு நாகபூஷணி அம்மன்
# இரதோற்சவ சிறப்புமலர் - 2001


தேர் ஏறிவா! அம்பிகையே!
அடியார் குறை தீர வீதி உலா
வாரும் அம்பிகையே!

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
மங்கையர் நாடும் இடம்.

**பிரசாத் நகை அகம்**

177 GN, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)
(C/1829)

நாட்டு மக்கள் அனைவர்க்கும் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி
அம்மனின் அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்!

**ஜீவபாரதி கல்வி நிலையம்**
5ம் வட்டாரம், நயினாதீவு.

**ஜீவபூரணி கல்வி நிலையம்**
1ம் வட்டாரம், நயினாதீவு.
(C/1832)

நயினை நாகபூஷணிக்கு இன்று தேர் உலா
அவள் பக்தர்களுக்கு இன்று அருள் விழா
தங்க நகையுலகில் தனியிடம் பிடித்தவர்கள்

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**
☆ தங்கப்பவுண் நகை வியாபாரம் ☆
170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-1824)

இன்று தேர் உலா வரும் நயினை
நாகபூஷணியின் அருள் வேண்டி
நிற்கின்றோம்!

**வாசன்ஸ் ஸ்ருடியோ**
87/2, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-1836)

இன்று தேரேறும் நயினை நாகபூஷணி அம்மன் அனைவருக்கும்
அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்!
☆ தங்க நகையுலகில் மங்காப் புகழ் பெற்ற தங்க ஆபரணங்களின் சொர்க்கபுரி
☆ நாளைய நாகரிகத்தின் இன்றைய முன்னோடிகள்



**வினோ நகைப் பூங்கா**
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. - FAX - 2824
(C/1821)

பக்தர் நலம் காக்க தேரேறி வலம் வரும் மணிபல்லவத்தின் நாயகியே! உன்
அருள் வேண்டி நிற்கின்றோம்!!
உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள தங்க, வைர
நகைகளுக்கு யாழ் நகரில்.....



**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-1823)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன்

# இரதோற்சவ சிறப்புமலர் - 2001


அலைந்திடும் மக்கள் அமைதி பெற்றிட நயினை நாகபூசணியின் அருள் வேண்டி நிற்கின்றோம்!

★ நாவினிக்கும் தரமான குளிர்பான வகைகளுக்கும் ★ சிற்றுண்டி வகைகளுக்கும்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி, (கி 1843) யாழ்ப்பாணம்.

மணிபல்லவத்தின் நாயகிக்கு இன்று திருத் தேர்த் திருவிழா! அவள் அடியார்களுக்கு இன்று அருள் விழா!!

★ அழகிற்கு மெருகூட்டும் அழகுசாதனப் பொருட்களா? ★ எவர் சில்வர் பாத்திரங்களா?

★ அலுமினியப் பாத்திரங்களா?

அனைத்தையும் மொத்தமாக யாழ் நகரில்பெற்றுக்கொள்ள


**கௌரி அழகுமாடம்**

316, கே. கே. எஸ். வீதி, போன் - 021-3227 யாழ்ப்பாணம்.

(கி 1852)

இன்று தேரூம் நயினை நாகபூஷணியின் அருள் அனைவருக்கும் கிடைத்திட வேண்டிநிற்கின்றோம்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க வைர ஆபரங்களின் சொர்க்கபுரி



**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(C/1827)

மணி பல்லவத்தின் நாயகிக்கு இன்று தேர் உலா! அவள் பாதம் நம்பினோர்க்கு இன்று அருள்மழை பொழியும் விழா!

புன்னகை சிந்திடும பெண்ணுக்கு பொன்னகை பேரழகெல்லவா அப்பேரழுகுக்கு

★ **சாரங்கா நகைமாடம்**

174/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமையகம்:-

**அருள் முருகன் நகையகம்**

171/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளையகம்:-

**சாரங்கா நகைமாடம் அன் சென்ரர்**

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

C/1826

பார் போற்றும் மணிபல்லவத்தின் நாயகிக்கு இன்று தேர் உலா அவள் அடியார்களுக்கு இன்று அருள் விழா

அழகிற்கு மேலும் அழகூட்டும் தங்க - வைர நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்

**மகாநதி ஜுவல்லறி**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நயினாதீவு நாகபூஷணி அம்மன்

# இரதோற்சவ சிறப்பு மலர் - 2001

மணிபல்லவத்தின் அம்பிகைக்கு இன்று ரத உலா! அவள் பாதம் நாடுவோருக்கு அருள் விழா!!

மின்னிப் பேசிடும் அசல் 22 கரட் பொன்னகைகளை உங்கள் எண்ணம் போல் செய்து பெற்றுக்கொள்ள ---

## நந்தினி நகைமாடம்

218 G, கஸ்தூரியார் வீதி, போன் - 021 - 3121 யாழ்ப்பாணம்

(கி-1839

இன்று தேர் உலா வரும் மணிபல்லவத்தின் நாயகியை வணங்கி வரம்வேண்டி நிற்கின்றோம்!

★ ஸ்பெஷல் ஐஸ்கிறீம் ★ ஜெலி ஐஸ்கிறீம் ★ வெனிலா ஐஸ்கிறீம்

மற்றும் குளிர்பான வகைகளுக்கு யாழ் நகரில்

## குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, போன் -- 021-2147 யாழ்ப்பாணம்.

(கி-1835)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி

# அமுதசுரபி அன்னதான சபையின்

# வாழ்த்து

அலைகடல் நடுவிருந்து அன்னம் பாலிக்கும் தெய்வமாக இன்னம் பாலித்துக் கொண்டிருக்கும் எம் தாய் நயினை நாகேஸ்வரியின் இன்றைய தேர்த் திருவிழாவிலே சகல அம்பிகை அடியார்கட்கும் சகல ஐஸ்வரியங்களும் கிடைக்க வேண்டுமென்று நாற்பத்தியிரண்டாவது தனது தொடர்ந்த சேவையினை தொடர்ந்து கொண்டிருக்கும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி 'அமுதசுரபி' அன்னதான சபையினர் வேண்டிக் கொள்ளும் இத்தினத்தில் எமது சபையின் சேவை மேலும் மேலும் சிறப்புற அம்பாளின் அருளை வேண்டிக் கொள்கின்றோம்.

த. சிவானந்தன்

தலைவர்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.

BANK A/C
AMUTHASURABHI
A/C NO. 1247985001
Commercial Bank,
Peoples Park,
Colombo.

JAFFNA
SaVing A/C 5167
Commercial Bank,
Jaffna.

T. P; No; 438991

(Gy1831)

இடிக்குந் துணையாரை
ஆள்வாரையாரேகெடுக்குந்த
தகைமையவர்?
குறள்

# வலம்புரி

## முக்கூட்டு கொள்ளையர்

யாழ்ப்பாணத்தில் தற்போது களவு, கசிப்பு, அடாவடித்தனம் என்பன வீதிக்கு வீதி மலிந்து விட்டது. தடுப்பாருமில்லை, தவிர்ப்பாருமில்லையென்ற அளவில்நிலைமை மோசமாகிவிட்டது. இவ்வாறு நிலைமை மிகமோசமாக மாறுவதற்கு அரச அதிகாரிகளும்பெரும்பங்கு வகிக்கின்றனர்.

களவிலும், கசிப்பிலும் ஈடுபடுவோர் இல்லாக் கொடுமையைக் காரணங் காட்டுகின்றனர். ஆனால் சில அரசஅதிகாரிகள் பகற்கொள்ளை அடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களோடு ஒப்பிடுமிடத்து கசிப்புக் காய்ச்சுபவர்கள் எவ்வளவோ மேலென்றே கூற வேண்டும்.

பகற்கொள்ளையில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட சில அதிகாரிகள் (தயவு செய்து தொப்பி அளவில்லாதவர்கள் அணியவேண்டாம்) நிவாரணக் கொடுப்பனவில் தமதுகைவரிசையைக் காட்டி வருகின்றனர். அதிகாரிகள் தான் அப்படியென்றால் கூட்டுறவுச் சங்கங்கள் அப்பாடி, இப்போதெல்லாம்கொள்ளையர்களின் கூடமாக மாறிவிட்டது. [பொருத்தமில்லாதகூட்டுறவுகள் அமைதியடைக.]

அதனால் தான் உழுத்துப்போன அரிசி, ஒன்றுக்கும் உதவாத் பருப்பு என நிவாரணப்பண்டங்கள் காட்சி தருகின்றன. என் செய்வது பிணம் தின்னும் கழுகுகள் ஒன்று சேர்ந்து ஏழைகளின் உணவில் மண்ணை அள்ளித் தூவுகின்றன.இறைவன் பார்ப்பாரென ஒரு கணம் ஆறுதல் அடைந்தால். அந்தோ அநியாயம், குழந்தைகளுக்கு வழங்கும் பால்மாவிலும் மோசடி. அதனால் ஏதுமறியாத பச்சிளம் பாலகர்கள் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய கிரிமினல் குற்றத்தைக் கண்டுபிடிக்க இங்கு யாருமிலர். சில அரச அதிகாரிகள், சில கூட்டுறவாளர்கள், சில நீதியற்ற வர்த்தகர்கள் என்ற முக்கூட்டு கொள்ளையர்கள் ஒன்று சேர்ந்து விட்டனர். அதற்கு நாட்டின் யுத்த நிலையும் களம் அமைத்த விட்டது. சமூக நீதி, சமய நெறிகள் கப்பலேறிவிட்டன. ஏழைகள் மீதான சுரண்டல் மானியகாலசமுதாயத்தை தோற்றுவிக்கப்போகிறது.

# ஆளும் தமிழக அரசின் அதிரடி நடவடிக்கையால்
# முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி சிறையில்

இது ஒரு திகில் கதையின்தொடக்கமோ, மர்ம நாவலின் முதலாம் அத்தியாயமோ அல்ல.இந்திய தமிழ் நாட்டில் அண்மையில்முன்னாள் முதல்வர் கருணாநிதி கைது செய்யப் பட்டது தொடர்பாக நட்ட நடு நிசியில் நடை பெற்ற அந்தக் கைதுக் காட்சியின் எழுத்துருவாக்கம் அவ்வளவே!



30.06.2001: அதிகாலை 1.45 மணியளவில் நிசப்தமயமாக இருந்த கோபாலபுர ஒலிங்சாலையில் உள்ள அந்த அடுக்கு மாடி வீடு, விரைந்து சென்ற ஓரிரு வாகனங்களின் 'கிறீச்' என்ற பிறேக்ஓசையை அடுத்து பரபரக்கத் தொடங்கியது. நட்டநடுநிசியில்திடீரென வந்து குதித்த பொலிஸ் காரர்களின் பூட்ஸ் ஒலி, தூங்கி வழிந்து கொண்டிருந்த அவ் வீட்டுக் காவலர்களைவிழிப்படையவைத்தது: திபு திபு என வீட்டுக் கம்பவுண்டினுள் நுழைந்த பொலிஸ் காரர்களைக்கண்டு அரண்டு போன காவலர்கள் மிரட்சியுடன் என்ன? ஏது? என்று கேட்பதற்கு முன்னரே முட்டித் தட்டப்பட்டுமுடங்க வைக்கப் பட்டனர். எப்படியோ.: தப்பித்த ஓரிரு காவலர்கள் வீட்டின்உட்புறக் கதவை பலமாகத் தாளிட்ட பின்னர், மாடிப்படிகளில் தாவி ஏறி அந்த மாண்பு மிகு முன்னால் முதலமைச்சர் பள்ளி கொண்டிருக்கும் அறைக்கதவை 'தட்டிவிட்டுத் தான் உள்நுழைய வேண்டும், என்ற நாகரிகத்தை எல்லாம் மறந்தவர்களாய் உள் நுழைய.அங்கேபழுத்துபோன அந்தமுன்னால்முதலமைச்சர் தனது இரண்டாவது மனைவி ராஜாத்தி அம்மாளுடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

இவைஎவற்றையும் அசட்டை செய்யாது மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க காவலன் போட்ட கூச்சலில் கண் விழித்த முதல்வர், திகைத்தவராய் நோக்க... காவல் துறையினரின் திடீர் ஆக்கிரமிப்புப்பற்றி பாதிதமிழிலும் பாதி சைகைகளின் மூலமும் உரைத்த காவலனின் தோற்றமே 'இங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை கலைஞருக்கு சொல்லாமல்சொல்லிற்று' அதைஉறுதிப் படுத்துவதுபோலக்கீழேபடார் படார்;:: எனகதவுடைக்கப்படும் சத்தங்களும் காவல் அறையினரின் இகர அசைவுகளும் மேல்மாடியின் அந்த அறை வரை தெளிவாக எட்டியது?

### எதிர் பார்த்த நிகழ்வோ

இவை எல்லாவற்றையும் முன்னரே எதிர்பார்த்திருந்ததாலோ என்னவோ கலைஞர் கருணாநிதி கழற்றி வைத்திருந்த தன் கறுப்புக் கண்ணாடியை நிதானமாக அணிந்து விட்டு உடனடியாகத் தன்மருமகனும் மத்திய அமைச்சருமான முரசொலி மாறனின் தொலைபேசி இலக்கத்தை அழுத்த.:: தொலைபேசியோ எவ்வித சலனமற்று ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது தொலைபேசி இணைப்புக்கள் யாவும் கீழே இருந்த பொலிஸாரினால் ஏற்கனவே துண்டிக்கப்பட்டிருப்பது அப்போது தான் புரிந்தது: எனவே கலைஞர் உடனடியாக தன் கைத் தொலைபேசி மூலம் மாறனுடன் தொடர்பு கொண்டு நிலைமையைவிளக்கிக்கொண்டிருக்ககீழே கதவைஉடைத்த பொலிஸார் ஆக்ரோசமாக மாடிப்படிகளில் ஏறிவருவதன் அடையாளமாக பூட்ஸ்களின் ஒலி வளர்ந்து கொண்டிருந்தது.

### அரண்டுபோன மனிதாபிமானம்

கருணாநிதி இருந்த அறையை எட்டிய பொலிஸார் உடனடியாக அவர் பேசிக் கொண்டிருந்த தொலைபேசியை பறித்தவுடன், அவரைக் கீழே வந்து தமது வாகனத்தில் ஏறுமாறு உரத்த குரலில் பணித்தனர். பிடி ஆணை எதுவும் காட்டப் படாமல் ஏன்? எதற்கு என்று எதுவுமேகூறப்படாமல், நான் உங்களுடன் எதற்காக வர வேண்டும் என்று ஒரு முதலமைச்சருக்குரிய பாணியில் கருணாநிதி எதிர் விவாதம் புரிய பொலிஸ் அதிகாரியின் குரல் அவரை, அதிரவைத்தது தன்னை உடைமாற்றி வர வாவது அனுமதியுங்கள் என்ற கலைஞரின் கூற்றை அசட்டை செய்த பொலிஸார் தம்மை எல்லாம் ஒரு காலத்தில் ஆண்ட, அரை நூற்றாண்டு கால அரசியல் அனுபவம் மிக்க, எத்தனையோ நூல்களை எழுதிக் குவித்து கலைஞர்' என்று பெயர் பெற்ற, எல்லாவற்றிற்கும் மேலாக 78 வயதுகள் நிரம்பிய ஒரு வயோதிபரைச் சட்டையில் பிடித்து தரதர என்று மாடிப் படிகளில் இழுத்துக் கொண்டு போன பொலிஸாரின் அடாத்தன செயலை மனுநீதி கண்ட நாட்டில் வாழும் மக்கள் மன்னிக்கார் என்பது திண்ணம்?

### பதில் தரவேண்டிய நிலையில் ஜெயா

கருணாநிதியுடன் கூடவே அவரது மனைவி ராஜம்மாளும் பொலிஸாரால் இழுத்து வரப்பட்டார்;

கலைஞரின் மீதிருந்த தனிப்பட்ட விரோதமும் அம்மாவால், அருளிச் செய்யப்பட்ட ''பழி வாங்க வேண்டும் என்ற வேத வாக்கும்,, என்ன செய்தாலும் யார் பார்க்கப் போகிறார்கள். எனவும் எண்ணிய பொலிஸாருக்கு கலைஞர் வீட்டு சுவர்களுக்குக் கூட கண்ணிருக்கும் என எண்ணாமல் விட்டமை தான் இப்போது வினையாகிப் போயுள்ளது; இப்படி எல்லாம் நடக்கும். இதை வைத்தே ஜெயலலிதாவிற்கு பொறி வைக்க வேண்டும். என திட்டமிட்ட கலைஞரும் அவரது ஆதரவாளரான சன் தொலைக் காட்சி நிறுவனமும் காரியத்தை கச்சிதமாக நடத்தி முடித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க கருணாநிதியின் தொலைபேசி அழைப்பை பெற்று அவ்விடம் விரைந்த அவரது மருமகனும் மத்திய அமைச்சருமான முரசொலி மாறன் மாமாவை தனியவிட அனுமதிக்கமாட்டேன். நானும் அவருடனேயே வருகிறேன் எனக் கூறிக் காரில் ஏறி அமர்ந்தவரை பொலிஸார் அலாக்காக தலைக்கு மேல் தூக்கி தொப்பென்று கீழே வீசி உள்ளனர். ஒரு இதய நோயாளியும் தற்போது பதவியிலிருக்கும் ஒரு மத்திய அமைச்சருமான ஒருவரை இவ்வாறு நடத்தியது முறைதானா? என்ற மத்திய அரசின் கேள்விக்கு ஜெயலலிதா பதில் சொல்லியே ஆகவேண்டும்?

### தி.மு.க அழிப்பு

இத்துடன் மத்திய அமைச்சர் பாலு, கருணாநிதியின் மகன் மாறான அழகிரி, ஸ்ராலின் அவரது மனைவிமார், தி.மு.க முக்கியஸ்தர்களான சுப்புலட்சுமி, ஜகதீசன், தாமரைக்கலை உட்பட 8000 தி.மு.க தொண்டர்கள் ஆதரவாளர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள்என்பவர்களை பல்வேறு காரணங்களைக் கூறி சிறையில் தள்ளி உள்ள அ.இ.அ.தி.மு.க தலைவி ஜெயலலிதாவின் நோக்கம் ஹிட்லர் யூதர்களைக் கொன்றொழித்தது போல எதிர்காலத்தில் தி.மு.க என்று ஒன்று நாட்டில் இருக்கக்கூடாது என்பதாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது;

### பழிக்குப்பழி

இவ்வாறு கருணாநிதியைக் கைது செய்வதற்கான காரணம் அவர் சென்னை நகரில் பாலம் அமைக்கும் வேலையின்போது 12 கோடி லஞ்ச ஊழல் புரிந்தார் என்பது தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையாளர் காவல்துறையிடம் கொடுத்த புகாரே என்று வெளி உலகிற்கு சொல்லப்பட்டாலும் உண்மையான காரணம் வேறு என நோக்கர்கள் கருதுகிறார்கள்?

இதேபோல முன்பு கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்ட ஜெயலலிதா 28 நாட்கள் சிறை வாசம் அனுபவித்து அலுமினியத்தட்டில உணவுண்ட அந்த ஜீரணிக்கமுடியாத அனுபவம் அவருள் ஆழமாகப் பதிந்து விட்டதால்தான் தெது ஆட்சிபறிபோனாலும் பரவாயில்லை கருணாநிதியை பகிரங்கமாகவே பழி வாங்க வேண்டும் என்ற அவரின் ஆதங்கம், இந்த ஐந்தாறுநாள் சம்பவங்களிலும் அப்பட்டமாகவே புலப்படுகிறது:

### கனத்த கண்டனம்

ஜெயலலிதாவின் மேற்படி செயல்குறித்து பல பாகங்களில் இருந்தும் கண்டனங்கள் வந்தவண்ணம் உள்ளன. இந்திய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் உட்பட ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் பா.சிதம்பரம் விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பு தலைவர் திருமாவளவன் த.மா.கா. தலைவர் மூப்பனார் என்போர் கண்டனம் தெரிவித்ததுடன் நக்கீரன் கோபால் உட்பட பல ஊடகவியலாளர்களும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர்.

## ரீ. ரீ. மயூரன்

அத்துடன் தமிழ் நாட்டு அரசியலில் கணிசமான அளவு மாற்றத்தை ஏற்படுத்தவல்ல உள்ள நடிகர் ரஜனிக்காந்தும் ஏனைய திரைப்படவியலாளர்களும் இச்சம்பவத்திற்கு எதிர்ப்புந் தெரிவித்திருப்பதாவது அ.இ.அ.தி.மு.கவின் ஆட்சியை கேள்விக் குறிக்குள்ளாக்கி இருக்கிறது;

### மாறிய வேஷம்

எது எவ்வாறிருப்பினும் வர்ணத் தொட்டிக்குள் விழுந்த நரி இப்போது நான் வேறு அவதாரம் என்றுகூறிக் கொண்டு காட்டு மிருகங்கள் எல்லாவற்றையும் ஆட்சி செய்து கொண்டிருக்கும் போது திடீர் என வந்தமழையால் வேஷம்கலைந்துவிரட்டி அடிக்கப்பட்டதுபோல, தேர்தல்காலத்தில் தமிழகமக்களுக் காயப் போட்டுக்கொண்ட வேஷம் கருணாநிதியின் கைதென்ற பெருமழையால் கலைந்து போய்விட்டதென்றுதான் கூற வேண்டும் ஒரு குற்றவாழியை முதலமைச்சராக்கியதற்குரிய பலாபலனை தற்போது ஆளுநர் பாத்திமாபீபியும் கதவடைத்து, ஆர்ப்பாட்டம் புரியும் மக்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

# நிவாரணத்துக்கு வழங்கிய பால்மாவின் பாதிப்பு குறைந்தபாடில்லை

(மூந்திகை)

நிவாரணத்திற்கு வழங்கிய பால்மாவினை உட்கொண்டு குழந்தைகளுக்கு பாலூட்டியமையால் பாதிக்கப்பட்ட மேலும் இரு குழந்தைகள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

கணேஸ்வரன் டர்சினி [வயது 2] குடத்தனை, நடராசா மதுசலா [வயது ஒன்றரை] தேவரையாளி ஆகிய இருகுழந்தைகளுமே வயிற்றோட்டத்தினால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்?

இதேவேளை, இவ்வாறு நிவாரணத்துக்கு வழங்கிய பால்மாவினால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக 40 இற்கும் அதிகமான குழந்தைகள் கடந்த மாதத்தில் சிகிச்சை பெற்றுச் சென்றிருப்பதாக மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-23]

# தடுப்புமுகாம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன் தடுப்பு முகாம் சென்று கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அவர்களுக்கென உறவினர்களால்கொடுக்கப்படும்உணவு கடிதம் ஆகியவற்றை எடுத்துச் சென்று ஒப்படைப்பதுடன், கைதிகள் கொடுக்கும் உறவினர்களுக்கான கடிதங்களையும் எடுத்து வருவார்.

[உ-10]

## நாகம்ஸ்
(சுன்னாகம்)

இன்று முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தி
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த

**முதலமைச்சர் ஜெயந்தி**

வெண்திரையில்
முதன்முதல்
சுப்பர் ஸ்ரார்
விஜயசாந்தியின் படம்
ரீலஸ் வெளியீடு)
தினசரி 11-00, 2-30
மனி, ஞாயிறு6-30 மட்டும்
(3264


### பாராளுமன்றை . . .

இக்கட்டான நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிலேயே தங்கியுள்ளது. (இ)


## ராஜா
யாழ்ப்பாணம்

லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்

**சிட்டிசன்**

தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)


## கண்காட்சி

(கோப்பாய்)

கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் 'புத்துலகிற்கான பாதை' மாணவர் ஆசிரியர் ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் வித்தியாலய அதிபர் பொ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய மேம்பாட்டு உதவிக் கல்விப்பணிப்பாளர் த: இராசலிங்கம் பிரதம விருந்தினராகவும், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் மற்றும் நல்லூர் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (இ)

# மின் விநியோகம் சீரில்லை மாணவர்கள் சிரமம்

(கோப்பாய்)

கடந்த சில தினங்களாக கோப்பாய்ப் பகுதிக்கான மின்சார விநியோகம் சீரில்லை என அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நேர ஒழுங்கில்லாது கண்ட கண்ட நேரங்களில் எல்லாம் மின்சாரம் தடைப்படுவதாகவும்,

இதனால் விரைவில் வரவுள்ள க. பொ. த (உ/த) பரீட்சைக்கான கற்றல் ஆயத்தங்களில் ஈடுபட்டுவரும் மாணவர்கள் பெரிதும் சிரமமுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-79)

## மிதிவெடியில் சிக்கிக் காயம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியில் சிக்கிய ஒருவர் கை, கழுத்து, கண் ஆகியவற்றில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முத்துக்குமார் சிவகுமாரதாஸ் (வயது56) என்பவரே காயமடைந்தவராவார்.

மேய்ச்சலுக்காக மாட்டைக் கட்டிய வேளையில் மிதிவெடியில் இவர் சிக்கியதாக கூறப்படுகிறது.

(உ-10)

## நாளை சந்திரகிரகணம்

(கொழும்பு)

சந்திரகிரகணத்தை நாளை மறுதினம் இரவு வானில் அவதானிக்க முடியுமென்று கொழும்பு பௌதீகவிஞ்ஞான விரிவுரையாளர் கலாநிதி சந்தன ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை இரவு 7.35 தொடக்கம் 10.15 வரை சந்திர கிரகணத்தை அவதானிக்க முடியும்.

(இ-3)

## பாடசாலை உபகரணங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ். வந்து சேர்ந்த பாடசாலைகளுக்கான தட்டச்சு இயந்திரங்கள், ஆசிரியர் கைநூல்கள், இரசாயனப் பொருட்கள், விஞ்ஞான உபகரணங்கள். நூல்கள் ஆகியன யாழ். மாவட்டத்தில் 5 வலயங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து பாடசாலைகளில் நிலவி வந்த உபகரணங்கள் பற்றாக்குறை நிலை ஓரளவு நீங்கும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், பாடசாலைக்கான விளையாட்டு உபகரணங்கள் இந்த மாதம் இங்கு எடுத்து வரப்படும் எனவும் இவை வந்தவுடன் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### பிரதமர். . .

தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கா பிரதமருடன் பேசியது தொடர்பாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்டனத்திற்குள்ளானதாகத் தெரிய வருகிறது. (வ)


## இதய அஞ்சலி

ஈ.பி டி.பியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. தவராஜா அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி**
**சிவராஜா கனகசௌந்தரி**

அவர்களின் மறைவையிட்டு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி

தலைவர், உபதலைவர்
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(கி/ 2179)


### யாழ்குடா

பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதனைத் தட்டிக் கேட்கவேண்டிய கடப்பாடு அமெரிக்காவுக்கு உண்டு.

அரசும் விடுதலைப்புலிகளும் பேசுவதை அமெரிக்கவிரும்புகிறது சமாதானமுயற்சியில் ஈடுபடும் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியையும் அமெரிக்கா ஆதரிக்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. [இ]


## கண்ணீர் அஞ்சலி

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. தவராஜா அவர்களின் ஆருயிர்ச் சகோதரி

**திருமதி**
**சிவராஜா கனகசௌந்தரி**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்

தலைமைச் செயலகம்
யாழ்ப்பாணம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)
யாழ். மாவட்டம்.

(கி/ 2178)


### இடைக்கால

கொழும்புமாவட்ட நீதிமன்றம் அததீர்மானத்தின் பிரகாரம் திருமதிபேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கியமுன்னணியின் தலைவியாக செயற்படமுடியுமெனத்தெரிவிக்கப்படுகிறது, [வ-இ]


## சென்றல் நார்சிங்ஹோம் [தனியார்] வைத்தியசாலை,

350, பலாலிவீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,

04.07.2001. (இன்று) புதன் முதல் எமது சேவைகள் மேலும் விரிவாக்கப்பட்டு, பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

★ இரவு / பகல் தொடர்ச்சியான வெளி நோயாளர்சேவை
★ நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகள்
★ பிரசவ விடுதி வசதிகள்
★ வம்ச விருத்தி சுகாதார பிரச்சினைகளுக்கான ஆலோசனை
★ வைத்தியநிபுணர்களின் ஆலோசனை வசதிகள்

விரைவில் சத்திரசிகிச்சை வசதிகள் ஆரம்பிக்கப்படும்

[3307] நிர்வாகம்


### அவசரகால . . .

இதில் ஜனாதிபதி சந்திரிகா கருத்துத் தெரிவிக்கையில், நம்பிக்கையில்லா பிரேரணையில் அரசு வெற்றி பெறுமென்றும், இதனைத் தொடர்ந்து அரசைத் தக்க வைத்துக் புதிய யுக்திகள் கையாளப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் நிலைமைகளை நாம் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். அவசரகால சட்ட நீடிப்புபிரேரணை தோற்றால்விடுதலைப் புலிகள் மீதான தடை தானாகவே நீங்கிவிடும்.

இந்நிலையில் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படலாமெனவும் தெரிவித்துள்ளார். (வ)


### எம். பி. மிஷன் . . .

ளர் ஹர்ஷ குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வவுனியாவுக்குஅழைத்துவரப்பட்ட அவர் இன்று வவுனியாவில் வைத்து அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (வ)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**சிவராஜா கனகசௌந்தரி**



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ.பி.டி.பி]யின்
யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
**கௌரவ சி. தவராஜா**
அவர்களின் அன்புச்சகோதரி

திருமதி
**சிவராஜா கனகசௌந்தரி**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் எமது துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன்
(தலைவர்) உறுப்பினர்கள்
பருத்தித்துறை பிரதேசசபை
புலோலி

(சி/2176)



## மரண அறிவித்தல்,

### சின்னத்துரை கனகசௌந்தரி

கோவில் வீதி கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த சின்னத்துரை கனகசௌந்தரி 2.07.2001 திங்கட்கிழமை அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ் சென்ற சின்னத்துரை (முன்னாள் ஆசிரியர், கொண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாசாலை), கனகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும், திருமதி ம. யோகசௌந்தரி (அவுஸ்திரேலியா), திரு. சி. தங்கராசா (அவுஸ்திரேலியா, முன்னாள் முகாமையாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), திரு. சி. தவராசா (பாராளு மன்ற உறுப்பினர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற மகேந்திரன், திருமதி ரீற்றா (அவுஸ்திரேலியா), ஜீவரஞ்சினி ஆகியோரின் மைத்துனியும், தர்சினி (அவுஸ்திரேலியா) இன் சித்தியும், பிராமி, பிரமேஸ் ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் கோவில் வீதி, கொக்குவிலுள்ள அவரது இலலத்தில் 04.07.2001 இன்று புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்
சி. தவராசா
(பா.உ)
(சகோதரன்)
(கி-2177)


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ விதாபனத்தாரால் இல. 15, வெள்ளாத்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலைமாதம் 04-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.